REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 25 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 73 | Monday 25, March, 2024 | 16பக்கங்கள் | 50/-




## பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு இன்னும் மீண்டு வரவில்லை

### இதனை வெற்றிகரமாக கையாள்வோர் ஆட்சிக்கு வருவது அவசியம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு இன்னும் மீளவில்லை. எனவே, அடுத்த தேர்தலில் நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிகரமாக கையாளும் திறமை படைத்தவர்களே, ஆட்சிக்கு 06

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால இன்று CIDயில் வாக்குமூலம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று (25) குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தில் ஆஜராகவுள்ளார்.

அத் திணைக்களம் விடுத்துள்ள அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளமுன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, இன்று காலை தாம், வாக்குமூலத்தை 06

## புதிய மறுசீரமைப்புகளூடாகவே பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி

### சிலர், அரசியல் எதிர்காலத்தை சிந்தித்த போது நான், நாட்டைப் பற்றியே சிந்தித்தேன்

"யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம்" நிகழ்வில் ஜனாதிபதி



புதிய மறுசீரமைப்புக்களூடாக மாத்திரமே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றும், கடந்த கால பொருளாதார நெருக்கடியைப் போல எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். 06

### தரம் 05 வரையான அனைத்து பாடசாலை

# மாணவருக்கான போஷாக்கு உணவு திட்டம் இன்று ஆரம்பம்

### 1,660 கோடி ரூபா அரசாங்கம் ஒதுக்கீடு

### ஜனாதிபதி தலைமையில் பிரதான நிகழ்வு கொழும்பில்

தரம் 01முதல் தரம் 05 வரையுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இன்று (25) முதல் போஷாக்கான காலை உணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் பங்கேற்புடன் 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை உணவு வழங்கும் திட்டம் இன்று (25) நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகிறது.

இந்நிகழ்வுக்கு இணையாக மாகாண மட்டத்தில் ஆரம்ப நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் முன் காலை 7.30 முதல் 8.30 வரை காலை உணவை வழங்க கல்வி அமைச்சர் சுசில் பணிப்பு**

போஷாக்கு நிபுணர்கள் மற்றும் கல்வி அமைச்சின் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் காலை 7.30 மணி முதல் 8.30 மணிவரை இந்த 06





03 சுகாதார சேவை புதிய மாற்றத்துக்கு விரிவான கலந்துரையாடல்கள்

## யாழ். தென்மராட்சி திருச்செல்வம் தாடியால் வாகனத்தை இழுத்து சாதனை

### காலிமுகத்திடலில் நேற்று சம்பவம்



யாழ்.தென்மராட்சி பகுதியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் என்பவர் தனது தாடியாலும் தலை முடியினாலும் ஏஷ் பட்டா ரக வாகனத்தை 1,000 மீற்றர் தூரம் வரை இழுத்து சாதனையை நிகழ்த்தினார்.

நேற்றுக் காலை (24) 10.00 மணியளவில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலி முகத்திடலில் இந்நிகழ்வு நடைபெற்றது. 1,000 மீற்றர் தூரத்துக்கு வாகனத்தை தனது தாடியாலும் முடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே 06

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலையில் புதிதாக மருத்துவ பீடம் ஆரம்பம்

### 50 புதிய மாணவர்கள் இணைவு



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிதாக மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் புதிதாக 50 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். உடற்கூறியல் கற்கை பீடமும் திறக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கான தங்குமிட கட்டடத்துக்கான நிர்மாணப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வைபவம் பதுளை நூலக 06




பாகிஸ்தான் தேசிய தின நிகழ்வுகள் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் கடந்த 23இல், நடைபெற்றன. நிகழ்வில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகத்தினர் கணிசமானோர் கலந்துகொண்டனர். 1947.08.14 பாகிஸ்தான் உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்த வரலாற்று சிறப்புமிக்க 1940 லாகூர் தீர்மானத்தின் நினைவாக ஆண்டுதோறும் மார்ச் 23 இல், 06

## வெள்ளவத்தை பகுதி ஆடையகத்தில் பாரிய தீ

### உயிர்ச் சேதங்கள் கிடையாது என பொலிஸார் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு வெள்ளவத்தை நகரில் பிரபல தனியார் ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று மாலை பாரிய தீ அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. 06

## இறக்குமதி பால் மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

### 01 கிலோ 150 ரூபா, 400 கிராம் 60 ரூபாக்களால் குறைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளின் விலைகள் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளன. இந்த பால் மாவுக்கான விலைகளை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வர்த்தக அமைச்சர் 06



06 கொழும்பு, டாக்காவுக்கிடையே Fits Air நேரடி விமான சேவை
குறைந்த கட்டணத்தில் ஏப்ரல் 16 முதல் ஆரம்பம்

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 25-27 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.42 |
| ஸுபஹ் | 04.57 |
| சூரிய உதயம் | 06.13 |
| ழுஹர் | 12.18 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

விவசாயத்துறை மேம்பாடு:

## பட்ஜட்டுக்கு மேலதிகமாக ரூ. 2500 மில்லியன் நிதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்திற்காக வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக, மேலும் 2500 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை 06

## மாகாண சபையை நடைமுறைப்படுத்த ரெலோ தொடர் அழுத்தம் கொடுக்கும்

### 11 ஆவது தேசிய மாநாட்டு பிரகடனத்தில் அறிவிப்பு

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் அரசியல் யாப்பில் திருத்தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்த தொடர் அழுத்தம் கொடுப்பதென தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தனது தேசிய மாநாட்டு பிரகடனத்தில் அறிவித்துள்ளது. 06



## மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும் 28 வரை தொடரும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை எதிர்வரும் (28) வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 28 க்குப் பின்னர் மீண்டும் மழையுடனான காலநிலை குறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் அத் திணைக்களத்தின் பிரதிப் 06



# வடமாகாண உற்பத்திகளை இணையவழி ஊடாக சந்தைப்படுத்த FARM TO GATE செயலி அறிமுகம்

## யாழ் ஒட்டகப்புலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அங்குரார்ப்பணம்

## இடைத்தரகர்களின் தலையீடு இனிமேல் குறையும்

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வழிகாட்டுதல்களுக்கு அமைய வடிவமைக்கப்பட்ட FARM TO GATE இணைய செயலியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். யாழ்ப்பாணம் ஒட்டகப்புலம் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வின் போது இந்த இணைய செயலி மக்கள்மயப்படுத்தப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்கான இணையவழி சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளிக்கும் வகையில் FARM TO GATE இணைய செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வாழ்க்கையில் புத்துயிர் ஊட்டக்கூடிய ஒரு புதிய முயற்சியாக FARM TO GATE இணைய செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இணைய செயலி அங்குரார்ப்பண நிகழ்வில் வடமாகாண ஆளுநரால் செயலியின் பயன்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

விவசாயிகள் மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் தங்கள் கடின உழைப்பிற்கான சிறந்த விலையையோ அல்லது நன்மைகளையோ பெற்றுக் கொள்வதற்கும், பரந்த சந்தை அணுகுவழிகளை அடைந்து கொள்வதற்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாக ஆளுநர் தெரிவித்தார். அங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்த புதிய செயலியின் ஊடாக சிறுவிவசாயிகள், பண்ணை முயற்சியாளர்கள், வீட்டுத்தோட்ட முயற்சியாளர்கள், ஏனைய உற்பத்தி முயற்சியாளர்கள் நுகர்வோருடன் நேரடியாக இணைக்கப்படுவார்கள் எனவும் இதனூடாக இடைத்தரகர்களின் தலையீடு குறைக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் இலகுவான சந்தைப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பை அதிகரித்தல், உற்பத்திக்கான நியாயமான விலையை பெற்றுக் கொடுத்தல், பொருளாதாரத்திற்கு வலுவூட்டுதல், நிலைபேறான வளர்ச்சி, நுகர்வோருக்கான வசதிகளை மேம்படுத்துதல், உற்பத்தியாளர்களின் தரவுத்தளத்தை பேணுதல், உற்பத்திகளை பட்டியல்படுத்துதல் மற்றும் நுகர்வோர் கொள்வனவுக்கான கட்டளையிடல், பொருட்களை கொள்வனவு செய்துக் கொள்வது, குறுஞ்செய்தி ஊடாக தகவல்களை பரிமாற்றம் செய்யும் முறை மற்றும் எதிர்கால ஏற்றுமதி விவசாயத் திட்டம் உள்ளிட்ட பல தரவுகளை உள்ளடக்கிய பல்வேறு விடயங்கள் இந்த புதிய செயலியில் காணப்படுகின்றன. அந்த வகையில் FARM TO GATE இணைய செயலி இணையத்தளமாக மாத்திரமன்றி பொருளாதார மாற்றத்திற்கான உந்துதலாக அமையும் என வடக்கு ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார். ஜனாதிபதியினால் கடந்த 22 ஆம் திகதி Farm to Gate செயலி அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நடைபெறவுள்ளது. வடமாகாணத்தின் உற்பத்திகளுக்கான இணையவழி சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளிக்கும் வகையில் செயற்படுத்துமாறு ஆளுநரால் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டதற்கமைய, விவசாயிகள் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வாழ்க்கையில் புத்துயிர் ஊட்டக்கூடிய ஒருபுதிய முயற்சியான Farm to Gate இணையசெயலி உருவாக்கப்பட்டுள்ளது.

எமது விவசாயிகள் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள், தங்கள் கடின உழைப்பிற்கான சிறந்த விலையினையோ நன்மைகளையோ பெற்றுக் கொள்வதற்கும் பரந்த சந்தை அணுகுவழிகளை அடைந்து கொள்வதற்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். Farm to Gate என்ற இந்த செயலியின் நோக்கமானது இவ்வாறான சிறு விவசாயிகள், சிறு பண்ணை முயற்சியாளர்கள், வீட்டுத்தோட்ட முயற்சியாளர்கள், சிறு முயற்சியாளர்கள் ஆகியோரை நுகர்வோருடன் நேரடியாக இணைப்பதுடன் தரகர்களின் தலையீடுகளை குறைப்பதும் ஆகும்.














**Farm to Gate செயலியின் நன்மைகள்:**

- ★ மேற்படி செயலியின் மூலம் சந்தைப்படுத்தல் வசதிகள் பல்வேறு வழிகளில் மேம்படுத்தப்படும்.
- ★ இலகுவான சந்தைப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பை அதிகரித்தல். சிறு உற்பத்தியாளர்களுக்கு பரந்த சந்தை வாய்ப்பை வழங்குதலும், நுகர்வோர் தமது தேவைகளை தெரிவு செய்வதற்கான மேம்படுத்தப்பட்ட சந்தை வசதியை வழங்குதலும்.
- ★ நியாயமான விலை_ உற்பத்தியாளர்களுக்கு நியாயமானவிலை கிடைப்பதற்கு வசதியளித்தலும் கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத்தன்மை பேணுப்படுவதை உறுதி செய்தலும்.
- ★ பொருளாதாரத்திற்கு வலுவூட்டுதல்_ சிறு தொழில் முயற்சியாளர்களதும் விவசாயிகளதும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்.
- ★ நிலைபேறான வளர்ச்சி_ நிலைபேறான விவசாய திட்டங்களை மேம்படுத்துதலும், உள்ளூர் பொருளாதாரத்திற்கு உதவுதலும்.
- ★ நுகர்வோருக்கான வசதிகள்_ நுகர்வோருக்கான இலகுவான இணையவழி கொள்வனவு கட்டளை மற்றும் கொள்வனவு செய்யும் வசதிகளை வழங்குதல்.

Farm to Gate என்பது ஒரு இணையத்தளம் மட்டுமல்ல. இது ஒரு மாற்றத்திற்கான உந்துதலாகவும் அமைந்துள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து அரச திணைக்களங்களும் இந்த செயலியின் நாளாந்த தரவேற்றங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு உறுதியுடன் இணைந்துள்ளன.



மேலும் இந்தச் செயலியானது விவசாயம் மற்றும் கைத்தொழில் முயற்சிகளின் நிலைபேறான திட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சக்திவாய்ந்த நுட்பமாகும்.

- ★ உற்பத்தியாளர்களின் தரவுத்தளம்_ விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளின் விபரங்கள் மற்றும் அமைவிடம் போன்ற விபரங்களை தரவுத்தளத்தில் காட்சிப்படுத்த முடியும்.
- ★ உற்பத்திகளை பட்டியற்படுத்துதல்_ உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளின் விபரங்களுடன் படங்கள் மற்றும் விலை போன்ற விபரங்களையும் தரவேற்றம் செய்ய முடியும்.
- ★ நுகர்வோர் கொள்வனவிற்கான கட்டளையிடல்_ நுகர்வோர் தேவையான பொருட்களை ஆராய்ந்து, தேர்ந்தெடுப்பதற்கும் கட்டளையிடுவதற்கும் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் இலகுவானது.
- ★ குறுஞ்செய்திகளை பரிமாற்றும் முறைமை_ உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் நேரடியாக தொடர்பு கொள்வதற்கும் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்கும் அவர்களுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் வசதியளிக்கப்படுகின்றது.
- ★ எதிர்கால ஏற்றுமதி விரிவாக்கத் திட்டம்_ விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதுடன் உள்ளூர் வர்த்தகத்தின் மேம்படுத்துதல் மூலமும் எதிர்காலத்தில் ஏற்றுமதி விரிவாக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்துதல்.

இந்த வகையில் Farm to Gate செயலியின் செயற்பாட்டிற்கு விவசாயிகளையும் சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்களையும் அவர்களது உற்பத்திகளின் விபரங்களை பதிவேற்றம் செய்யுமாறும் அவற்றை காட்சிப்படுத்துமாறும் ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நுகர்வோர்கள் மற்றும் பாவனையாளர்கள் தமக்குத் தேவையான தரமான பொருட்களை உடன் பெற்றுக் கொள்வதற்கும் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் இணைந்து இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதற்கும் கோரப்படுகின்றது.

அரச உத்தியோகத்தர்களுக்கு Farm to Gate செயலி தொடர்பாக விழிப்புணர்வை அனைத்து தரப்பினருக்கும் வழங்குவதற்கும் இச்செயலியின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்புடனான ஆதரவினை வழங்குமாறும் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## விவசாய டிஜிட்டல் வலையமைப்புக்குள் ஒன்றிணையுமாறு, இணைய செயலி அங்குரார்ப்பண நிகழ்வில் விவசாயிகளிடம் வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ் கோரிக்கை

# சுகாதார சேவையின் புதிய மாற்றத்துக்கு விரிவான கலந்துரையாடல்கள் அவசியம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடனான சந்திப்பில் ஜனாதிபதி



நவீன மருத்துவ சேவைகளுக்கு உகந்த வகையில் புதிய தொழினுட்ப மாற்றங்களு க்கேற்ப நாட்டின் சுகாதார சேவையில் மாற்றத்தை ஏற்ப டுத்துவதற்கு கலந்துரையா டல்களை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் துடன் (23) நடைபெற்ற சந்திப்பிலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங் கத்தின் ஏற்பாட்டில் "தலைமைத்து வம் மற்றும் திறன் மேம்பாடு" என்ற தலைப்பில் ஒரு நாள் செயலமர்வு (23) பொலன்னறுவையில் ஆரம்ப மானது. உத்தியோகபூர்வ நிகழ்வு ஒன்றில் பங்கேற்க பொலன்னறுவைச் சென்றிருந்த ஜனாதிபதிக்கு, இந்நிகழ் வில் இணைந்துகொள்ளவும் திடீர் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையேற்று அங்கு சென்ற ஜனாதி பதி அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களுடன் சிநேகபூர்வ உரை யாடலில் ஈடுபட்டார்.

இலங்கையில் காலனித்துவக் காலத்திலிருந்து இலவச மருத்துவ முறைமை காணப்படுவதாகவும், அதனை முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த கடந்த கால அனுப வங்களுடன் நாட்டில் தரமான மற்றும் உயர்தர சுகாதார சேவைகள் உறுதிப்ப டுத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக் காட்டினார்.

சுகாதார சேவையில் செயற்கை நுண் ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட் பங்களை இணைப்பதற்கான சாத்தியக் கூறுகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் 10 முதல் 15 ஆண்டுக ளுக்குள் இந்தப் புதிய மாற்றங்களை முன்னெடுப்பதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்காக சுகா தாரத் துறையிலுள்ள அனைவருட னும் பரந்த உரையாடலை நடத்த எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கான யோசனைகள், ஆலோ சனைகளை வழங்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் அரசியல்மயப்படுத்தாமல் தர்க்கரீதி யாக மேற்கொள்வதன் முக்கியத்துவத் தையும் விளக்கினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, அரச வைத்திய அதிகாரி கள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே உள்ளிட்ட சங்க உறுப் பினர்கள் கலந்துகொண்டனர்.

# ரமழான் சிந்தனை

## பாவமன்னிப்புக்கான காலம்

அல்லாஹுத்தஆலா மிகவும் இரக் கமுள்ளவன். தனக்கு அருளாளன், மன்னிப்பாளன், தெளபாக்களை ஏற்ப வன் என்ற நாமங்களை சூட்டிக்கொண் டவன். எனவே அவனிடத்தில் மிகவும் தூய்மையான உள்ளத்துடன் செய்த பாவங்களை நினைத்து வருந்தி பச்ச தாபப்பட்டு இதன் பிறகும் அத்தகைய பாவங்களை நோக்கி மீளமாட்டேன் என்ற உறுதியுடன் மிகவும் தாழ்மை யோடு மன்னிப்புக் கேட்கும்போது எமது பாவங்களை அவன் மன்னிக்கத் தயாராக இருக்கிறான்.

'(நபியே) நீர் கூறுவீராக..! தங்கள் ஆத்மாக்களுக்கு அநியாயம் செய்து கொண்ட எனது அடியார்களே..! அல் லாஹ்வின் கருணையைப் பற்றி நம்பிக்கை இழந்து விடாதீர்கள். நிச் சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங் களையும் மன்னித்து விடுகிறான். அவன் பெரிதும் மன்னிப்போனும் கரு ணையானவனாக இருக்கிறான்' (சூரா அஸ்ஸுமர்: 56)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'மனிதர்கள் தவறு செய்யக்கூடியவர் கள். அவர்களில் மிகச் சிறந்தவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்பவர் கள்' என்று கூறியுள்ளார்கள்.

அதேநேரம், 'ஒரு முஸ்லிம் காலையில் செய்யும் பாவங்களை மன் னிக்க மாலையிலும் மாலையில் செய் கின்ற பாவங்களை மன்னிக்க காலை யிலும் தெளபாவுடைய வாசல்களை இறைவன் திறந்து வைத்துள்ளான்.' என்றும், ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று, இரவு வணக்கங்களில் ஈடுப டுவதன் மூலம் அல்லாஹுத்தஆலா முன்பாவங்களை மன்னிக்கிறான் எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள். 'யார் ரமழானில் நம்பிக்கை யுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட் டுள்ளார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி) எனவே நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு அதிக மதிகம் பாவமன்னிப்பு கோருவோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பை யும் அருளையும் பெறுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கிராமிய வீதிகளை புனரமைக்கும் பணிகள்





ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வின் பிறந்த தினத்தையிட்டு கிராமிய வீதிகளை புனரமைக் கும் பணிகள் நேற்று (24) ஆரம்பிக்கப்பட்டன.

பொலன்னறுவை எலஹெர திய பெதும நெற் களஞ்சியசாலையிலி ருந்து யாய 34 கிராமம் வரையான வீதிகளின் புனரமைப்புப் பணிகளை போக்குவரத்து நெடுஞ்சா லைகள் மற்றும்

06

# தவக்கால சிந்தனை



## புனித வார சிறந்த ஒறுத்தல்கள்

தவக்காலத்தின் புனித வாரத்தில் பயணிக்கி றோம். ஓர் அருமையான தவக்காலத்தினை அனுபவித்தீரா? கட வுளின் அருளால் உமக்கு விருப்பமான உணவினைத் தவிர்த்தீரா அல்லது ஏலவே, தீர்மானித்துக் கொண்ட கட வுளுடன் செலவிட ஒதுக்கிய மேலதிக பத்து நிமிட இறைவேண்டலில் ஈடுபட தவறினீரா? தேவையிலுள்ள யாருக் காவது தர்மம் செய்தீரா அல்லது ஒரு நல்ல விடயத்திற்காக தாராளமாகக் கொடுத்தீரா?

நாம், தவக்காலத்தினை திறந்த இத யத்துடன் ஆரம்பித்தோம், ஆயினும் இப்பயணத்தில் நமது பலவீனத்தை மேற்கொள்ள போராட வேண்டி ஏற்பட் டிருக்கும். இப்போது நாம் புனித வாரத் தில் இருக்கிறோம். இவ்வாரம் திரு அவையின் திருவழிபாட்டு ஆண்டில் மிகவும் புனிதமான காலமாகும்.

தவக்காலமானது எமக்கு மிகவும் பக்தி நிறைந்த காலமாகவோ அல்லது ஏமாற்றம் நிறைந்த காலமாகவோ அமைந்திருக்கலாம். நமது கடவுள் எப்போதும் நமக்கு இரண்டாவது சந் தர்ப்பத்தை தருகிற கடவுளாவார்.

ஆகவே இப்புனித வாரத்தில் உங் களது நாளாந்த செயற்பாட்டிலிருந்து சிறிது நேரத்தை எடுத்து கடவுளோடு இறைவேண்டலில் கழியுங்கள் அல்லது செபமாலை, பக்தி முயற்சிக ளில் ஈடுபடுங்கள். இவ்வாரத்தில் நல்ல ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு அவற்றை ஈஸ்டர் பெருவிழாவில் இல் லாதவர்களோடு பகிர்ந்து கொள்ளுங் கள்.

பெரிய வியாழன், பெரிய வெள்ளி, திருவிழிப்புச் சனி வழிபாடுகள் திரு அவையின் வழிபாட்டு ஆண்டின் வழி பாடுகளின் உச்சமாகும். இதற்கென தகுந்த நேரத்தை ஒதுக்கி அவ் வழிபாட் டில் கலந்து கொள்ளுங்கள். எல்லா ஆலயங்களிலும் பெரிய வெள்ளிக்கி ழமையன்று திறந்த பொது சிலுவைப் பாதை நடைபெறும். அதில் கலந்து கொள்வதனூடாக நாம் இயேசுவின் பாடுகளில் உள்நுழைய முடியும். அவ்வாறே ஏனைய வழிபாட்டு நிகழ் வுகளிலும் கலந்து ஆன்மீக ரீதியில் ஆயத்தமாவோம். இன்றைய நற்செய் தியில் இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்ட இலாசரின் வீட்டில் அவர் உணவருந்து வதை வாசிக்கின்றோம். அது அவரது பாடுகளுக்கான முன்னாயத்த விருந் தாகும். அவ்விருந்தில் மரியா இயே சுவின் பாதங்களை விலையுயர்ந்த நறுமணத் தைலத்தால் பூசி அவற்றை தன் கூந்தலால் துடைத்தாள் என்று வாசிக்கின்றோம். அப்போது அவ்வீடு முழுவதும் நறுமணத்தால் நிறைந்தி ருந்தது. நாமும் புனித வார பயணத் தில் நம்மை அன்பு செய்கின்ற இயே சுவிற்கு மரியாவைப் போன்று நமது அன்பினைப் பொழிவோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)



ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தில் இலங்கையை முன்னேற்றும் நோக்கில் கைத் தொழில் அமைச்சு மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை முதன்முறை யாக International Industry Expo 2024 கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் ஜுன் மாதம் 19இல், பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இம்மாநாடு ஆரம்பமாகவுள்ளது. இக்கண்காட்சி 23 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளது. பவர் ஹெண்ட் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் இக்கண்காட்சிக்கு பிரதான அனுசரணை வழங்கியுள்ளது.இதற்கென அந்நிறுவனம் 20 மில்லியன் ரூபா பெறும தியான காசோலையை சுகாதார, கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும ஆகியோரிடம் கையளித்தது. நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஜீவந்த பிரபாத் குலசிங்கவிடம் இக்காசோலை கையளிக்கப்பட்டது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

ரூ. 80,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மார்ச் 27ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124F287 | LKA18224I270 | LKA36425C282 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 20,000 | 30,000 | 30,000 | 80,000 |

ஏல விற்பனைத் திகதி : 2024 மார்ச் 27
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஏப்பிரல் 01
வழங்கப்படும் திகதி : 2024 மார்ச் 29
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 மார்ச் 27 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

முதனிலை வணிகர்களின் பட்டியல்

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என்.டி.வை.சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

# ஜனாதிபதியின் பிறந்த நாளையிட்டு வவுனியாவில் விசேட பூஜைகள்

## கட்சி அங்கத்தவர்களுக்கு இலவச காப்புறுதி

வவுனியா விசேட நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வவுனியாவில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றதுடன், கட்சி அங்கத்தவர்க ளுக்கு இலவச காப்புறுதித் திட்டம் வழங் கும் நிகழ்வும் நேற்று (24) ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன் தலைமையில் வவுனியா கந் தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபா டுகள் நடைபெற்றன. வவுனியா அருள்மி கந்தசாமி ஆலய பிரதம குரு தலைமை யில் நடைபெற்ற இவ்விசேட வழிபாடுக ளில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா அலுவலகத்தில் கட்சியின் உறுப் பினர்களுக்கு இலவச காப்புறுதி வழங்கும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.சுமார் 2,000 பேருக்கு இந்த இலவச காப்புறுதித் திட்டம் வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட் டமாக வவுனியாவைச் சேர்ந்த கட்சி உறுப் பினர்கள் 100 பேருக்கு காப்புறுதி வழங்கி வைக்கப்பட்டது.





# போலிக் கடவுச்சீட்டில் ஜப்பான் பயணிக்க முயன்ற ஈரானியர் கைது

போலி, பல்கேரிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஜப்பானுக்கு செல்ல முயன்ற ஈரானியப் பிரஜை ஒருவர் விமான நிலையத்தில், குடிவரவு குடிய கல்வுத் திணைக்கள அதிகாரிக ளால் (22) கைது செய்யப்பட்டார்.

ஈரானிய பிரஜையான இவர்,கடந்த (22) மாலை 4.06 மணியளவில் தோஹாவிலிருந்து QR654 கட்டார் விமான மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இங்கி ருந்தவாறு அன்றிரவு 8.30 மணிக்கு ஜப்பானின் நரிட்டா நகருக்கு செல் வதற்காக ஆவணங்களை அதிகா ரிகளிடம் சமர்ப்பித்துள்ளார். இவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவ டிக்கையின் போது, போலி பல்கேரிய கடவுச்சீட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட் டது.

# போக்குவரத்து சட்டங்களை மீறுவோர் தரவு தொகுதிக்கு உள்வாங்கப்படுவர்

## அமைச்சர் வசந்த அலகியவன்ன

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வீதிப் போக்குவரத்து சட் டங்களை மீறும் சாரதிகளுக்கு எதிராக எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் விசேட வேலைத் திட் டத்தை நடைமுறைப்படுத் தப் போவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 முதல் வீதிப் போக்குவரத்து சட்டங் களை மீறி செயற்படும் சாரதிகளின் தகவல்கள், தரவு கட்டமைப்புக் குள் உட்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தண்டப் பணம் செலுத்தும் தபால் நிலையங் கள் ஊடாக குற்றத்தின் தன்மை, குறித்த பொலிஸ் நிலையத்தின் தகவல்கள், சாரதி அனுமதிப்பத்திர தகவல்கள் மற்றும் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களும் இவ்வாறு தரவு தொகுதிக் கட்டமைப்புக்குள் உள் வாங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 14

**குறள் தரும் சிந்தனை**



துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

பற்றற்ற துறவிகட்கும், பசியால் வாடுவோர்க்கும், பாதுகாப்பற்றவர்க்கும் இல்லற வாழ்வு நடத்துவோர் துணையாக இருத்தல் வேண்டும்.

# பொருளாதார முன்னேற்றத்தின் விளைவாக கிடைத்த நன்மைகள்

இலங்கை 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அந்நெருக்கடியினால் வங்குரோத்து நிலையை அடைந்து பொருளாதார ரீதியில் அதல பாதாளத்திற்குள் தள்ளப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்களினால் அந்த பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவோ, அப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளான மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கவோ முடியவில்லை. அதனால் அன்றைய ஆட்சியாளர்கள் பதவிகளை விட்டு விலகினர்.

இவ்வாறான சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்பதற்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கவும் எவரும் நாட்டுக்கு தலைமை வழங்க முன்வராத இக்கட்டான நிலை உருவானது.

அந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாபதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அத்தோடு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவர் ஆரம்பித்தார். அப்பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறுகிய காலம் முதல் பலனளிக்கத் தொடங்கின. அதனால் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாகக் குறைவடைந்து நீங்கலாயின.

குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருப்பது முடிவுக்கு வந்ததோடு, பொதுப்போக்குவரத்து சேவையும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. மின்வெட்டுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. உல்லாசப் பயணிகள் வருகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டது.

ஆனால் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது பெரும்பாலான மக்கள் நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு பொறுமை காத்தார்கள். அதனால் இந்நெருக்கடியில் இருந்து பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு அமைய மக்களுக்கு சலுகைகளும் நிவாரணங்களும் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

அந்த வகையில் அஸ்வெசும கொடுப்பனவு, பசளை மானியம், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு, மின்கட்டணக் குறைப்பு என்றபடி பல்வேறு நிவாரணத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் சிங்கள, தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இருபது கிலோ அரிசியை இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

அந்த அடிப்படையில்தான் சிங்கள, தமிழ் புத்தாண்டின் நிமித்தம் இவ்வருடமும் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோ கிராம் அரிசி இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படவிருக்கிறது. கடந்த வருடமும் சிங்கள, தமிழ் புத்தாண்டின் நிமித்தம் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் 27.4 இலட்சம் குடும்பங்களுக்கு இவ்வாறு அரிசி வழங்கப்பட்டது.

இவ்வருடமும் 27 இலட்சம் குடும்பங்களுக்கு புத்தாண்டின் நிமித்தம் இலவசமாக அரிசி வழங்கப்பட உள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிதி இராஜங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, இத்திட்டத்திற்கென 11 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றுள்ளார்.

உண்மையில் இது பாரியதொரு மக்கள் நலத்திட்டமாகும். மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

அதேநேரம் பால்மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் ரூபா 150 குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு நாட்டிலுள்ள சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் கல்வி பயிலும் 16 இலட்சம் மாணவர்களுக்கு இன்று முதல் காலை உணவு வழங்கப்பட உள்ளது. தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான பாடசாலைப் பிள்ளைகள் வழங்கப்படும் இத்திட்டத்திற்கென 1660 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் நாடு பிரவேசித்திருப்பதன் வெளிப்பாடே இவையாகும். நம்பிக்கை தரும் வகையில் பொருளாதாரம் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அந்த வகையில்தான் இவ்வாறான மக்கள்நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை அனைத்தும் நாட்டின் எதிர்கால சுபீட்சத்தை இலக்காகக் கொண்ட திட்டங்களே அன்றி வேறில்லை என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வீரப்பனின் மகள்!

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டில் நாம் தமிழர் கட்சி சார்பாக கிருஷ்ணகிரி தொகுதி நாடாளுமன்ற வேட்பளராக வீரப்பனின் மகள் வித்யாராணி வீரப்பன் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் இதற்கு முன்பு பா.ஜ.கவில் இருந்த நிலையில், தற்போது நாம் தமிழர் கட்சியின் சார்பாக போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் 18 ஆவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முதற்கட்டமாகத் தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவு எண்ணிக்கை, ஜூன் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கூட்டணி, தொகுதிப் பங்கீடு எனத் தீவிரம் காட்டி வரும் நிலையில், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதால் தேர்தல் களம் அனல் பறக்க ஆரம்பித்துவிட்டது.

அனைத்துக் கட்சிகளும் கூட்டணி, தொகுதிப் பங்கீடு எனத் தீவிரம் காட்டி வரும் நிலையில், சின்னம் தொடர்பான பிரச்சினையில் சிக்கியிருந்தது நாம் தமிழர் கட்சி. நாம் தமிழர் கட்சிக்கு கொடுக்கப்பட்டிருந்த 'கரும்பு விவசாயி' சின்னம் மற்றொரு கட்சிக்கு ஒதுக்கப் பட்டது சலசலப்பை ஏற்படுத்தியது.



அதனைத் தொடர்ந்து 'சீமானின் சின்னம் என்ன?' என அக்கட்சியினர் சுவரொட்டிகள் மூலம் ஊகங்களை வெளிப்படுத்தி வந்தனர்.

முதலில் வருபவருக்கே சின்னம் என்ற அடிப்படையில் கரும்பு விவசாயி சின்னம் மற்றொரு கட்சிக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், ஆறு சதவீதத்திற்கு மேல் வாக்கினை பெற்றுள்ள தங்களுடைய கருத்தைக் கேட்காமல் மற்றொரு கட்சிக்கு சின்னம் ஒதுக்கப்பட்டது அநீதி என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்து வந்தார்.

தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டதால் அவசர வழக்காக உடனடியாக விசாரிக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் நவநீத் துகர் கோரிக்கை கடிதம் எழுதியிருந்தார். இருப்பினும் வழக்கு விசாரிக்கப்படாமல் நிலுவையில் இருப்பதால், நாம் தமிழர் கட்சிக்கு 'மைக்' சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டணியின்றி தனித்துப் போட்டியிடும் நிலையில், நாம் தமிழர் கட்சி தமிழகம் மற்றும் புதுச்சேரி என மொத்தமுள்ள 40 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை முன்னதாகவே வெளியிட்டிருந்தது. இந்நிலையில் நேற்று சென்னை பல்லாவரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய சின்னம் மற்றும் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிமுகப்படுத்தி உள்ளார்.

# காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபையும், 'பட்டுமாமா' சரவணமுத்து பத்மநாதனும்

காரைநகர் வாரிவளவில் 1970 களில் நல்லியக்கச்சபை என்ற அமைப்பினை இளையோர்கள் தோற்றுவித்தார்கள். கல்வி, மொழி,கலை,பண்பாடு,விளையாட்டு அபிவிருத்தி மற்றும் சமூக நல்லிணக்க மேம்பாடு என்பன இவற்றின் குறிக்கோள்களாக இருந்தன.

இவ்வமைப்பினூடாக பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. அமைப்பின் மண்டபத்தின் உள்ளே டேபிள் ரெனிஸ், கரம், செஸ்,டாம் போன்ற விளையாட்டுகளும் மண்டபத்திற்கு வெளியே வாரிவளவுப் பிள்ளையார் கோயில் வீதியில் கிரிக்கெட், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், தாச்சி முதலிய விளையாட்டுகளும் இடம்பெற்றன.

சித்திரை வருடப்பிறப்பையொட்டி பிள்ளையார் கோயில் திருவிழா முடிவடைய மாபெரும் விளையாட்டு விழா மூன்று தினங்கள் இடம்பெறும். இவ்விளையாட்டு விழாவில் முன்பள்ளி மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளடங்கலாக வயது மற்றும் பால் வேறுபாடின்றி எல்லோரும் பங்குபற்றுவதுண்டு.

மைதான நிகழ்வுகள், சுவட்டு நிகழ்வுகள் மற்றும் பெருவிளையாட்டுகள் எல்லாம் நடைபெற்றன. காரைநகர் வீதிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெற்றன. ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான கடற்பகுதியில் ஆண், பெண் இருபாலாருக்குமான நீச்சல் போட்டிகள் இடம்பெறுவதுண்டு.

இதேபோன்று நவராத்திரியை முன்னிட்டு முத்தமிழ் போட்டிகள் மூன்று தினங்கள் வயது வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி நடைபெறுவது வழக்கம். நடனப் போட்டிகள், நாடகப்போட்டிகள், சங்கீதப்போட்டிகள், பேச்சுப்போட்டிகள், பண்ணிசைப்போட்டிகள், பட்டிமண்டபம் என்பன நடைபெறுவதுண்டு.

இவ்வமைப்பின் செயலாளராக 'பட்டுமாமா' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட கல்வித் திணைக்களத்தின் மூத்த நிர்வாக அதிகாரி சரவணமுத்து பத்மநாதன் பொறுப்போடு பணியாற்றி பல ஆண்டுகளாக இந்நிகழ்வுகளைத் திறம்பட நடத்தினார். பின்னர் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திற்கும் முன்பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளாக இவை விரிவுபடுத்தப்பட்டன. இந்நிகழ்வுகள் இரவு வரை நடைபெற்றன.

இந்நிகழ்வுகள் நடைபெறும் தினங்களில் காதல்கள் பல கைகூடும். அதனால் சில வேளைகளில் சண்டை சச்சரவுகளும் மூளும். இதனை விட பேசிச்செய்யப்படும் திருமணங்களின் பெண் பார்க்கும் படலமும் மாப்பிள்ளை பார்க்கும் படலமும் நடந்தேறுவது வழமை. இத்தினங்களில் எங்கிருந்தாலும் ஊரவர்கள் ஒன்று கூடி மகிழ்வார்கள்.

இன்று பல்வேறு தரப்பினராலும் பேசப்படும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை எங்கள் கிராமத்தில் ஏறத்தாழ ஐந்து தசாப்தங்களுக்கு முன்பே நாங்கள் தொடங்கியிருந்தோம். அதனூடான சிறந்த அறுவடையையும் பெற்றோம். பலர் இச்செயற்பாடுகளினூடாக வளர்க்கப்பட்டனர்.

பட்டுமாமா அவர்களை நினைவுகூரும் முகமாக வாரிவளவைச் சேர்ந்த முன்னாள், இந்நாள் இளையோர் சில நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி உள்ளார்கள். அதன் முன்னோடியாக காரைநகரில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே பட்டு மாமா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 30.03.2024 அன்று காரைநகர் யாழரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன.



இதனைத் தொடர்ந்து 16.04.2024 அன்று மாலை இரண்டு மணிக்கு இறுதிப்போட்டியும் தொடர்ந்து பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் காரைநகர் யாழ்ரன் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற உள்ளன.

காரை கந்தையா பத்மானந்தன்...

# தொட்டவத்தை ஐக்கிய சமயம்சார் கல்விச் சமூகத்தின் ஸக்காத் திட்டம்



பாணந்துறை தொட்டவத்தை ஐக்கிய சமயம்சார் கல்விச் சமூகத்தின் *THOTAWATTA RELIGIOUS UNITED EDUCATION SOCIETY _TRUES)* கூட்டு ஸக்காத் சேகரிப்புத் திட்டமும் சேவைகளும் இந்த அமைப்பின் ஸ்தாபகரான தொட்டவத்தை பள்ளிவாசல்கள் தர்மகர்த்தாவின் வழிகாட்டலில் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022 ஆம் ஆண்டு உதயமான இந்த அமைப்பு சிறப்பு வழிகாட்டல் மற்றும் சிறந்த முகாமைத்துவம் ஊடாக கூட்டு ஸக்காத் சேகரிப்பு மற்றும் அமைப்புசார் பணிகளை தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகஅமைப்பின்செயலாளர் முஸாப் ஹலீம் ஆசிரியர் தெரிவித்தார்.

ஸக்காத் கடமையானவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் ஸக்காத் நிதியை கூட்டு ஸக்காத் நிதியத்துக்கு ஒன்றுதிரட்டி பிரதேசத்தின் வறுமை ஒழிப்பு, கல்வி, மருத்துவம், வாழ்வாதார உதவி, சுயதொழில் முயற்சி, வீடு புனரமைப்பும் வீடமைப்பும், கடன் ஒழித்தல், காணி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு சமூக மறுமலர்ச்சித் திட்டங்களை அமைப்பு முன்னெடுத்து வருவதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.



அமைப்பின் செயலாளர் முஸாப் ஹலீம்

தொழில் வாய்ப்பின் நிமித்தம் தகுதியானவர்களுக்கு முச்சக்கரவண்டிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை தொட்டவத்தை பள்ளிவாசல்களின் தர்மகர்த்தா இந்த அமைப்பின் ஸ்தாபகராக விளங்குகிறார். தொழில்நிறுவனமொன்றின் உரிமையாளர்கள் ஆலோசகர்களாக உள்ளனர். பள்ளிவாசல் பரிபாலன பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு கடந்த இரண்டு வருடங்களில் பல்வேறு திட்டமிடப்பட்ட முறையான சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆண்டில் ஸக்காத் நிதியத்துக்கு சுமார் ஒன்றரை கோடி ரூபாவும் இரண்டாவது வருடத்தில் சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாவும் சேர்ந்துள்ளன.

அமைப்பின் சன்மார்க்க ஆலோசகர்களாக மௌலவி ரிஸ்கான் முஹம்மத் மற்றும் மௌலவி எம்.எம்.எம்.முஷாகிர் ஆகியோர் பணியாற்றுவதுடன் 19 பேர் அமைப்பின் உறுப்பினர்களாவர் பிரதேசத்தில் மக்களுக்கு ஒருதொகை பணத்தை பகிர்ந்தளிக்கும் ஸக்காத் வழங்கல் சம்பிரதாயங்களை மாற்றியமைத்து பயனுள்ள திட்டங்களை அமுல்படுத்தி வரும் மேற்படி அமைப்பின் முயற்சி பாராட்டத்தக்க முற்போக்கான செயல் திட்டமாகும். எனவே இந்த அமைப்பின் கூட்டு ஸக்காத் பணிகளுக்கு தகுதியான அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதானம் திறப்புவிழா

யாழ் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதான திறப்புவிழாவும் இல்ல விளையாட்டுப் போட்டியும் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றன. வித்தியாலய முதல்வர் திருமதி கலைவாணி அருள்மாறன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி நோபேட் உதயகுமார் பிரதம விருந்தினராகவும், இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும், தற்போதைய மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபருமான பா . பாலசுப்ரமணியம் சிறப்பு விருந்தனராகவும், கனடாவில் இருந்து வருகை தந்த உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினரும் ஒய்வுபெற்ற கணக்காய்வாளரும் பழைய மாணவருமான சு . உமாசுதான் மற்றும் ஒய்வுநிலை பொறியியலாளரும் பழைய மாணவருமான பூ . சிவநேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சித்தன்கேணியில் நீண்ட காலமாக பொதுவிளையாட்டு மைதானம் இல்லாத குறை கனடா சித்தன்கேணி ஒன்றியம், சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகம், ஸ்ரீகணேசா வித்தியாசாலை மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்ட முயற்சியினால்







ஈடு செய்யப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் வசிக்கும் திருமதி சரோஜினி பரமநாதன் தமது பெற்றோர்களான அமரர்கள் முத்து லட்சுமி_ அப்பையா நினைவாக இவ்வுதவியை வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.+

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் தரம்_5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற பிரகலாதன் பிரணவன், நாகரூபன் பிரணவி ஆகிய இருவருக்கும் உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினர்களான சி . அருணேஸ்வரன் (சிட்னி) மற்றும் க. குமரன் (பரிஸ்) ஆகியோரினால் இரண்டு புதிய துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் வெட்டுப்புள்ளிக்கு மிகநெருங்கிய இரு மாணவர்களுக்கு தலா ரூபா 5000 சித்தன்கேணி உலக ஒன்றிய உறுப்பினர்களினால் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

# மானுடவியல்



158

பின்பு திருக்கோயிலினின்றும் புறப்பட்ட பொழுது திருநீலகண்டப் பெரும்பாணர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, "சுவாமி! அடியேனுடைய ஜன்மஸ்தலமாகிய திருவெருக் கத்தம்புலியூர் முதலாக நிவாவென்னும் நதிக்கரையில் இருக்கின்ற தலங்களை வணங்குதற்கு எழுந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஆளுடையபிள்ளையார் அதற்கிசைந்தருளி, தந்தையார் முதலிய சமஸ்தரோடும், திருநீலகண்டப்பெரும்பாணர் திருவவதாரஞ்செய்த திருவெருக்கத்தம்புலியூருக்கும் திருமுதுகுன்றுக்கும் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, பெண்ணாகடத்தை அடைந்தார். அங்கே திருத்தூங்கானை மாடம் என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியைத் தரிசனஞ் செய்துகொண்டு, திருநெல்வாயிலரத்துறைக்குப் போக விரும்பி, தந்தையாருடைய தோள்மேலிருத்தலை ஒழிந்து, அவர் மனம் வருந்தும்படி பிராமணர் முதலியோர் சூழ்ந்து செல்ல, திருவடித்தாமரை நோவ, பையப்பைய நடந்து, மாறன்பாடி என்னும் பதிவந்தவுடனே, வழி சென்ற வருத்தத்தினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு, அப்பதியிற் சென்றார். அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயிற்று.

அன்றிரவு பிள்ளையார் அடியார்களோடும் அந்தப் பதியிலேயே தங்கினார். திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கடவுள் தம்முடைய திருக்குமாரராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய வழிவருத்தத்தைத் திருவுளத்தடைத்து, அவர் ஏறுதற்கு முத்துச்சிவிகையும், அவருக்கு நிழற்றுதற்கு முத்துக் குடையும், ஊதுதற்கு முத்துச் சின்னங்களுங் கொடுத்தருளத் திருவுளங்கொண்டு, அந்த ஸ்தலத்திலிருக்கின்ற பிராமணர்களெல்லாருக்கும் தனித்தனியே சொப்பனத்திலே தோன்றி, "ஞானசம்பந்தன் நம்மிடத்துக்கு வருகின்றான், நீங்கள் முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னங்களும் நம்மிடத்தில் எடுத்து அவனிடத்திற்குக் கொண்டுபோய்க் கொடுங்கள்" என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, மகிழ்ந்து, அற்புதமெய்திய சிந்தையோடும் ஆலயத்திலே வந்து கூடி, திருப்பள்ளியெழுச்சிக் காலம் வர, திருக்காப்பை நீக்கி, முத்துச்சிவிகையயும் முத்துக்குடையையும் முத்துச் சின்னங்களையும் கண்டு, ஆனந்தங்கொண்டு, துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, சிவனடியார்களோடு, அந்தச் சிவிகை முதலாயினவற்றைத் தாங்கிக் கொண்டு, ஆளுடைய பிள்ளையாரிடத்திற்குப் போனார்கள். அதற்குமுன் பரமசிவன் ஆளுடைய பிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "நாம் உனக்கு முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னங்களும் அனுப்புகின்றோம். நீ அவைகளை ஏற்றுக்கொள்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தொடங்கொடை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

களுகங்கையும் கடலும் ஒன்றறக் கலந்து கடலுடன் சங்கமமாகும். களுத்துறை மாநகருக்கு தென் கிழக்கே சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் தொடங்கொடை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட பயாகல பெருந் தோட்ட பிரிவில் திருவருள் பாலித்து வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனராவர்தன கும்பாபிஷேக திருவிழா கடந்த சோபகிருது வருடம் பங்குனித் திங்கள் 7ஆம் நாள் (20.03.2024) புதன்கிழமை வளர்பிறை ஏகாதசி திரியும் பூச நட்சத்திரமும் கூடிய காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரையில் அமைந்திருந்த மங்களகரமான சுபமுகூர்த்த வேளையில் பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ வெகு கோலாகலமாக நடைபெற்றது.



நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமைக்கு முற்பட்ட மேற்படி ஆலயம் ஆரம்ப காலக் கட்டத்தில் முன்னோர்களால் ஆலமரத்டியில் மரத்தடியில் கற்சிலைகளை வைத்து பூஜை வழிபாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டு வந்ததாகவும் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்மனுக்கு சிறு கொட்டகையிட்டு கோவில் அமைத்து சிலை வைத்து பூஜை வழிபாடுகளை முன்னெடுத்து வந்ததாகவும் மரபுவழிக் கதைகள் மூலம் எமக்கு அறியக் கிடைக்கின்றது. அதன் பின்னர் 1977ஆம் ஆண்டில் நிரந்தரமாக ஆலயம் ஒன்றை அமைத்து பூஜை வழிபாடுகளை முன்னெடுத்துச் செல்ல மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல்வேறு சந்தர்ப்பங்களில் பின்னடைவை சந்தித்தது.

எனினும் தோட்ட பொது மக்கள், இளைஞர் யுவதிகள், தலைவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களின் விடாமுயற்சியால் 2013ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் ஆலயத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்த நிலையில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் புகழ்பெற்ற விஜே உற்பத்தி நிறுவன உரிமையாளர் மற்றும் பணியாளர் அருண கொத்தலாவல முன்வந்து சுமார் நூற்று ஐம்பது இலட்சம் ரூபாய் செலவில் முழுமையான ஆலயம் ஒன்றை அமைத்து, சுவாமி திருவுருவச் சிலைகளை வழங்கி, கலச ஸ்தாபனம் மற்றும் கும்பாபிஷேகம் செய்து வைத்து தொடர்ந்து பூஜை வழிபாடுகளை முன்னெடுத்துச் செல்ல தோட்ட பக்த பெருமக்களிடம் கையளித்தார். தொடங்கொட பிரதேசசெயலாளர்பிரிவுக்குஉட்பட, பயாகல பெருந் தோட்ட பிரிவில் திருவருள் பாலித்து வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனராவர்தன கும்பாபிஷேக திருவிழா 2024.3.14ஆம் திகதி முதல் 2024.3.20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தொடர்ந்து ஏழு தினங்கள் நடைபெற்றது. இத் திருவிழாவின் முதலாம் நாள் பூசை (14.3.2024) வியாழக்கிழமை காலை பூரவாங்க கிரியைகளுடன் ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து மாலை தொடங்கொடை நகரில் அமைந்துள்ள விஜேய நிறுவனத்தின் மூலம் விசேடமாக இந்திய மகாபலிபுரத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட சுவாமி திருவுருவங்கள் அங்கிருந்து ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இரண்டாம் நாள் (15.3.2024) வெள்ளிக்கிழமை மாலை கலசஸ்தாபனம், தீபஸ்தாபனம், விம்பஸ்தாபனம் என்பன நடைபெற்றன. மூன்றாம் நாள் (16.3.2024) சனிக்கிழமை காலை பக்தர்களால் பால்குடம் எடுத்துச் சென்று பக்தர்களின் கரங்களால் திருவுருவத்திற்கு அபிசேகம் செய்யப்பட்டதுடன் மாலை திருமுறை பாராயணம் நடைபெற்றது. நான்காம் நாள் (17.3.2024) ஞாயிற்றுக்கிழமை காலை விக்னேஸ்வர பூஜை, எண்ணெய் காப்பு, திருவுருவத்துக்கு எண்ணெய் சாத்துதல் என்பன நடைபெற்றன. ஐந்தாம் நாள் (18.3.2024) திங்கட்கிழமை மாலை திருமாவிளக்கிடல் மற்றும் மாவிளக்கு பூஜை நடைபெற்றன. ஆறாம் நாள் (19.3.2024) காலை யாகபூஜை, விசேட திரவிய ஹோமமம் மாலை விம்ப சுத்தி, நியாயங்கள் ஸ்பருசாகுதி என்பனவும் நடைபெற்றதுடன். இறுதி ஏழாம் நாள் (20.3.2024) புதன்கிழமை காலை பூர்ணா/ஹுதி, தீபாராதனை, வேத திருமுறை பாராயணம், நர்த்தன சமர்ப்பணம், கும்ப உத்தாபனம் வளர்பிறை ஏகாதசி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரையிலான சுபமங்கள முகூர்த்த வேளையில் புனராவர்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இங்கு தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

**நாராயணசாமி ஜெயரட்ணம்**
(களுத்துறை சுழற்சி நிருபர்)








கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய தேர்த்திருவிழா இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள் பி. புஷ்பராஜ் கொழும்பு, கொட்டாஞ்சேனை

## தந்தை செல்வா அறநெறிப் பாடசாலை சிவராத்திரி



மத்திய கொழும்பு இந்து மகாவித்தியாலயமும் தந்தை செல்வா அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்திய சிவராத்திரி நிகழ்வின் போது....

# மகாபாரதத்தில், கண்ணன் தூது!



இதன் ஆரம்பத்தில் ஒரு பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது. தேரேறி கிருஷ்ணன் தூது செல்கிறான். அஸ்தனாபுரி எல்லையில் தேரை நிறுத்திவிட்டு, ஊருக்குள் நடந்து செல்கிறான். எல்லோரும் கிருஷ்ணா கிருஷ்ணா என்று வணங்குகிறார்கள். எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய மாடி வீடுகள். இது யார் வீடு, இது யார் வீடு என்று கேட்டுக் கொண்டே நடக்கிறான் கிருஷ்ணன். பீஷ்மர் தன் வீட்டிற்கு வெளியே வந்து கிருஷ்ணா இது என் வீடு. என் வீட்டிற்கு வந்து தங்கலாமே என்றழைக்கிறார். வருகிறேன், வருகிறேன் உங்கள் வீட்டிற்கு வராமல் வேறெங்கு போகப்போகிறேன் என்று கூறி தொடர்ந்து நடக்கிறார் கிருஷ்ணர். துரோணாச்சாரியார், தன் வீட்டிற்கு வெளியே வந்து கிருஷ்ணா இது என் வீடு. என் வீட்டிற்கு வந்து தங்கலாமே என்றழைக்கிறார். வருகிறேன், வருகிறேன் உங்கள் வீட்டிற்கு வராமல் வேறெங்கு போகப்போகிறேன் என்று கூறி தொடர்ந்து நடக்கிறார் கிருஷ்ணர். கிருபாச்சாரியார், தன் வீட்டிற்கு வெளியே வந்து கிருஷ்ணா இது என் வீடு. என் வீட்டிற்கு வந்து தங்கலாமே என்றழைக்கிறார். வருகிறேன், வருகிறேன் உங்கள் வீட்டிற்கு வராமல் வேறெங்கு போகப்போகிறேன் என்று கூறி தொடர்ந்து நடக்கிறார் கிருஷ்ணர். சொல்கிறாரே தவிர யார் வீட்டிற்குள்ளும் நுழையவில்லை கிருஷ்ணன். மாடமாளிகைகளுக்கு நடுவே ஒரு ஓலைக்குடிசை. அங்கே நின்று கிருஷ்ணன் கேட்டான் இது யாருடைய வீடு? உள்ளே இருந்து விதுரர் வந்து சொன்னார், கிருஷ்ணா இது உன்னுடைய வீடு. ஓ அஸ்தனாபுரத்தில் எனக்கென்று அரையடி மண் கூட இல்லையென்று எண்ணிக் கொண்டிருந்தேன். எனக்கென்று வீடே இருக்கிறதா... எனக்கென்று வீடிருக்கும்போது, நான் துரோணர் வீட்டிலும், பீஷ்மர் வீட்டிலும் தங்கினால் மரியாதை இல்லை அல்லவா, நான் என் வீட்டிற்கு போகிறேன் என்று சொல்லி கிருஷ்ணர் விதுரர் வீட்டிற்குள் சென்றுவிட்டாராம். எனது என்கிற எண்ணம் இருக்கக்கூடாது. நான் என்கிற அகங்காரம், மமகாரம் இருக்கக்கூடாது. எல்லாம் இறைவனுடையது, பகவானுடையது எனும் எண்ணம் எங்கே யாரிடம் இருக்கிறதோ அங்கே பகவான் அனுக்கிரகம் நடைபெறுகிறது!

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19926) சிவபெருமான் பல அவதாரங்களை எடுத்தது ஏன்?** அரக்கர்களை அளிக்க

**19927) சில கோவில்களில் சிவபெருமான் லிங்க வடிவில் இல்லாமல் வேறு என்ன உருவத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகிறார்?** பஞ்சமுக

**19927) இந்த ஐந்து முகங்களுக்கும் தனித்தனி பெயர் இருக்கிறதா?** ஓம்

**19928) இந்த ஒவ்வொரு முகமும் எதனை விளக்குகிறது?**

சிவபெருமானின் ஒவ்வொரு அம்சத்தை

**19929) அந்த ஐந்து அம்சங்களையும் தருக?** முறையே இஷானா, தத்புருஷா, அகோரா, வாமதேவா மற்றும் சத்ஜ் யோதா.

**19930) இதில் இஷானா எதைக் குறிக்கிறது**? தென்கிழக்கு

**19931) இது எதனை குறிக்கிறது**? சிவபெருமானின் நிலையான தன்மையை குறிக்கிறது.

**19932) இது எந்த திசையை நோக்கி இருக்கும்?** தென் கிழக்கு திசையை நோக்கி



**19933) தத்புருஷா முகம் எதனை குறிக்கிறது?** சிவபெருமானின் ஈகோவை குறிக்கிறது.

**19934) இது எந்த திசையை நோக்கி இருக்கும்?** கிழக்கு

**19935) அகோரா முகம் சிவபெருமானின் எதனை குறிக்கிறது?**

ஆக்ரோஷத்தையும், மறுபிறப்பு ஆற்றலையும்

**19936) இந்த முகம் எந்த திசையை நோக்கி இருக்கும்?** தெற்கு

**19937) வாமதேவா முகம் ஈசனின் எதனை குறிக்கிறது?**

வைத்திய திறமையையும், பாதுகாக்கும் பண்பையும் பிரதிபலிக்கிறது.

**19938) இந்த முகம் எந்த திசையை நோக்கி இருக்கும்?** வடக்கு

**19939) சத்ஜ்யோதா சிவபெருமானின் எதனை பிரதிபலிக்கிறது?** படைப்பாற்றலை

**19940) இது எந்த திசையை நோக்கி இருக்கும்?** மேற்கு

**19941) அனுகிரகமூர்த்தி அம்சம் சிவபெருமானுடைய எதனை குறிக்கும்?** அமைதியான காலத்தை

**19942) உக்கிரமூர்த்தி சிவபெருமான் என்ன கடவுள் என போற்றப்படுகிறார்?** அழிக்கும் கடவுள்

**19943) உக்கிரமூர்த்தியான சிவபெருமானை என்னென்ன பெயர்களில் அழைக்கப்படுகிறார்?**

ருத்ரர், பைரவர், சம்ஹார மூர்த்தி என பல பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

**19944) உக்கிரமூர்த்தியின் ஒவ்வொரு வடிவமும் என்ன அவதாரமாக திகழ்கிறது?**

பூமியில் உள்ள அரக்கர்களை அழிக்கும் அவதாரமாகும்.


**19945) சிவபெருமானால் உக்கிர அவதாரம் ஏன் எடுக்கப்பட்டது?**

அரக்கர்களை அழிக்கவும் பூமியில் நீதியை நிலை நாட்டவும் எடுக்கப்பட்டது.

**19946) நடனங்களின் கடவுளாக விளங்குபவர் யார்?**

சிவன்

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 81



பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.

# சாய்ந்தமருதில் காசநோய் விழிப்புணர்வு செயற்பாடுகள்




(பாலமுனை விசேட நிருபர்)

காச நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நடைபவனி மற்றும் கருத்துரங்கு என்பன சாயந்தமமருதில் (23) நடைபெற்றது.கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்."ஆம் எம்மால் காச நோயை இல்லாதொழிக்க முடியும்" எனும் தொனிப்பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

# இலங்கை டாக்காவுக்கிடையே Fits Air நேரடி விமான சேவை

## குறைந்த கட்டணத்தில் ஏப்ரல் 16 முதல் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



இலங்கை, டாக்காவுக்கிடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பிக்க Fits Air விமான சேவை நடவடிக்கை எடுத்துள்ளது.

Fits Air விமான சேவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பங்களாதேஷின் டாக்கா விமான நிலையத்துக்கு சேவையில் ஈடுபடவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 16 முதல் குறைந்த கட்டணங்களில் இவ்விமான சேவைகள் இடம்பெறவுள்ளன.


முதற்கட்டமாக வாரம் இரு முறை டாக்காவுக்கான இவ்விமான சேவைகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஒரு வழிக் கட்டணமாக 74,600 ரூபாவை அறவிடப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Fist Air விமான சேவை தற்போது கட்டுநாயக்காவிலிருந்து துபாய், மாலைதீவு மற்றும் சென்னைக்கு நேரடி விமான சேவைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள் (25.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** சகோதரர் ஒற்றுமை பலப்படும். புதிய உத்தியோகம் முயற்சி கைகூடும். கடன் சுமை குறையும் தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.



**ரிஷபம் :** பிள்ளைகள் வழியிலும் பிரச்சினைகள் வந்து சேரலாம். பிள்ளைகளால் விரையங்களும் மன அமைதி குறைவும் ஏற்படும்.



**மிதுனம் :** விற்பனை செய்த சொத்துக்களால் பிரச்சினைகள் உருவாகும். தொழில்களும் சிறக்கும். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும்.



**கடகம் :** கொடுக்கல் வாங்கல் சீராகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். பல பணிகள் பாதியிலேயே நிற்ககூடும்.



**சிம்மம் :** உறவினர் பகை அதிகரிக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாகும் நிலை உருவாகும்.



**கன்னி :** உடல் நல தொல்லைகள் அதிகரித்து உற்சாகம் குறையும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய பிரச்சினைகளை சந்திக்க கூடிய சூழல் உருவாகும்.




**துலாம் :** காரியத்தில் தேக்க நிலையும் கடமையில் தொய்வும் கலக்கம் தரும் மனநிலையும் ஏற்படும். குழப்பங்கள் அகலும். குதூகலம் தரும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.




**விருச்சிகம் :** பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோகம் மாற்றங்களில் கவனம் செலுத்துவீர்கள்.




**தனுசு :** பயணங்கள் பலன் தருவதாக இருக்கும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் அதிகரிக்கும். தொழில் வெற்றி நடை போடும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்.



**மகரம் :** உத்தியோகத்தில் இதுவரை தடைபட்ட பதவி உயர்வு இப்பொழுது தானாக வந்து சேரும். வாடகை கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைக்கூடும்.



**கும்பம் :** "கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் " என்பதற்கு ஏற்ப எதிர்பாராத சில நல்ல வாய்ப்புகள் வரலாம். தொழிலில் ஏற்றமும் இறக்கமும் காணப்படும்.



**மீனம் :** இது போன்ற காலங்களில் சுப விரயங்களை தேர்ந்தெடுத்து செய்வது நல்லது. உங்களுக்கு உங்கள் குழந்தைகளுக்கு உங்களை சார்ந்தவர்களுக்கோ கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

## மாகாண சபையை நடைமுறைப்படுத்த...

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 11 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (24) நடைபெற்றது.

இதன்போது இயக்கத்தின் மாநாட்டுப் பிரகடனத்தை பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'எமது மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளான வடக்கு_ கிழக்கு இணைந்த, தமிழர் தாயகத்தில், தம்மைத்தாமே ஆளுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய, சுயாட்சி அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான அரசியல் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதுடன், இந்த இலக்கை அடைவதற்கான நிரந்தர பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அந்தப் பொறிமுறையை இந்தியாவினுடைய மேற்பார்வையிலும் சர்வதேச நாடுகளின் பங்களிப்போடும் ஐ.நாவின் வழிநடத்தலோடும் புலம்பெயர் உறவுகளின் ஒருங்கிணைப்போடும் உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

அத்துடன், எமது தாயக பிரதேசத்தை எமது பாரம்பரிய வதிவிடமாகக் கொண்டு, எமது தனித்துவமான இன அடையாளத்தையும், தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்திய இந்திய_ இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தங்களோடு உருவாக்கப்பட்ட மாகாண சபை ஆட்சி முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளை செயற்ப்படுத்த வேண்டும். எமது இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச நீதிப் பொறிமுறைக்காக தொடர்ந்தும் பாடுபடுவோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியை கோரி நிற்கும் எம்மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

எமது தாயக பிரதேசத்தில் தொடர்ந்து அபகரிக்கப்பட்ட வந்த காணிகளை விடுவிப்பதற்கு பாடுபடுவோம். காணி அபகரிப்பின் விளைவாக எமது வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவதற்கு எதிரான சகல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

எமது இனத்தின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதோடு அவற்றை வளர்ப்பதற்கும் செழுமைப்படுத்தவும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மேற்கூறிய எமது மக்களின் நலன் சார்ந்த அரசியல் அபிலாசைகளையும் உரிமையையும் வென்றெடுப்பதற்கு முழு முயற்சியோடு ஈடுபடுவதென்று இந்த மாநாட்டில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பிரகடனப்படுத்தி நிற்கிறது'.

## புதிய மறுசீரமைப்புகளூடாகவே...

ஏனைய அரசியல்வாதிகள் பொறுப்பேற்கத் தயங்கிய நாட்டையே, தாம் பொறுப்பேற்றதாக சுட்டிக்காட்டிய அவர் , சிலர் தமது அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்த போதும், நாட்டின் எதிர்காலத்தை பற்றியே தாம், சிந்தித்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

பொலனறுவையில் (23) நடைபெற்ற “யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம்” உடனான சிநேகபூர்வ கலந்துரையாடலிலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

“ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்” என்ற இச்சந்திப்பில் நாட்டின் எதிர்காலம் மற்றும் தூரநோக்குக் குறித்து இளைஞர்களுடன் அவர் கலந்துரையானார்.

இளைஞர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

அரசாங்கம் மேற்கொண்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் மக்களுக்கு கிடைக்கும்.தங்களதும், நாட்டின் எதிர்காலத்தினதும் சிறந்த வழி எதுவென்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும்.

"சரிவடைந்திருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். இவ்வாறான நிலையில் அரசியல்வாதிகள் நாட்டைப் பொறுப்பேற்கத் தயங்கினர். நான் பொறுப்பேற்காவிட்டால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்தேன். அந்த நேரத்தில் நாட்டை பொறுப்பேற்றால் அரசியல் நலன்களை இழக்க நேரிடுமென பலரும் நினைத்தனர். அவர்கள் தங்களைப் பற்றி மட்டுமே சிந்தித்தனர். நான் நாட்டை பொறுப்பேற்காவிடின் எமக்கான நாடொன்று எஞ்சியிருக்குமா? என்பதையே நான் சிந்தித்தேன்.

பாராளுமன்றத்தில் தனியொரு ஆசனம் மட்டுமே இருந்தது. எனக்கு இருந்த ஒரே பிரச்சினை அதுவாகவே இருந்தது. அதற்கு முன்னதாக நான் டிசம்பர் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடியிருந்தேன். உலக வங்கியுடனும் கலந்தாலோசித்தேன்.

இதுபற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு கூறினேன். அத்துடன் கடந்த தேர்தல் சமயத்தில் நாட்டில் பணமில்லை என்பதை ஐ.தே.க அறவித்தது. குறைந்தபட்சம் 3,000 மில்லியன் டொலர்களை யாவது கையிருப்பில் வைத்திருக்க வேண்டியது அவசியமென கூறியது. அப்போது மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை.

ஆனால் 2021 ஆம் ஆண்டில் நாம் கூறியவை உண்மையாக நிகழ்ந்தன.

## மாணவருக்கான போஷாக்கு...

காலை உணவை வழங்குமாறு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு, போஷாக்கு மிக்கதாகவும் சுகாதாரமானதாக உயர்மட்டத்தில் இருப்பதை உறுதி செய்யுமாறும் கல்வி அமைச்சு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

ஆரோக்கியமான, சுறுசுறுப்பான தலைமுறை என்ற தொனிப்பொருளின் கீழ், 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கான உணவுத் திட்டம், மாணவர்களிடையே போஷாக்கின்மை பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர்களின் அன்றாட பாடசாலை வருகையை அதிகரிப்பது, சிறந்த உணவுப் பழக்கம் மற்றும் சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்துதல், கல்விக்கான சாதக நிலைகள் மற்றும் தேசி உணவு கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்கான நான்கு அடிப்படை நோக்கங்களை இது நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9,134 அரசாங்க பாடசாலைகளிலும், 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கி இந்த ஆண்டு மாணவர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தின் மூலம் 1.6 மில்லியன் மாணவர்கள் பயனடையவுள்ளனர்.

இதற்கென ஒன்பது மாகாண சபைகளுக்கும் அரசாங்கம் நேரடியாக 16,600 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன், உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் (USDA) உட்பட ஏனைய அமைப்புகளும் அனுசரணை வழங்குகின்றன.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் நேரடித் தலையீட்டின் ஊடாக அரசாங்கம் ஒருவேளை உணவுக்காக 85 ரூபாவை வழங்குகிறது. தற்போது நடைமுறையில் சந்தை விலை உயர்வுகளுடன் ஒப்பிட்டு, அந்தத தொகையை 110 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த சத்துணவு திட்டத்துக்கு தேவையான உணவு வகைகளை தேசி வழங்குநர்களால் வழங்கப்படுவதுடன், நேரடி மற்றும் மறைமுகமான புதிய வேலை உருவாக்கம் மூலம் நாட்டின் உற்பத்தி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பங்களிப்பாகவும் இது அமைந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான உணவுத் திட்டம் தொடர்பான அனைத்து நிதி நிர்வாகங்களும் வெளிப்படைத்தன்மை மற்றும் அறிக்கைகளுடன் பராமரிக்கும் பொறிமுறையும் நடைமுறையில் உள்ளது.

கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளை இது தொடர்பான பணிகளை செயற்படுத்தி வருகிறது.

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால...

வழங்குவதற்காக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தில் ஆஜராவதாகவும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் சம்பந்தப்பட்ட முக்கிய நபரை தமக்குத் தெரியுமென, முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளதையடுத்து முன்னாள் ஜனாதிபதியின் கூற்று தொடர்பான குரல் பதிவு மற்றும் வீடியோவையும் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் பொறுப்பேற்று அதனை நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தீர்மானித்துள்ளது. கடந்த 22 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டியில் வைத்து மேற்படி கூற்றை வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு உத்தரவிட்டிருந்தார்.

அதனையடுத்து குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் இன்று அவரிடம் வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொ ள்ளவுள்ளது. அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன மற்றும் சிவில் அமைப்பொன்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்றுத் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளுமாறு குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு கடந்த 23 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நெருக்கடியிலிருந்து...

வர வேண்டுமெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். ஆட்சிக்கு வருபவர்கள் நாடு தொடர்பான தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அடுத்து வரும் தேர்தலில் நாட்டின் பொருளாதாரமே முக்கியமாக அமைய வேண்டும். அதனால் நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பாக முன்னெடுத்து செல்லக்கூடியவர்களே நாட்டை ஆட்சி செய்ய முடியும். அத்துடன் நாடு தொடர்பில் தூர தரிசன நோக்குக் கொண்டவர்களே ஆட்சிக்கு வர வேண்டும்.

பாரிய நெருக்கடி நிலையிலிருந்து இயல்பு நிலைக்கு நாடு திரும்பினாலும் பொருளாதாரத்தில் நிலவும் எச்சரிக்கை நிலை இன்னும் தொடர்கிறது. அந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையிலிருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊவா வெல்லஸ்ஸ...

கேட்போர் கூடத்தில் கடந்த (22) நடைபெற்றது. இந்நிகழ்வில் விமானப் போக்குவரத்து மற்றும் கப்பற்றுறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, ஊவா பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி ஜயந்த பலவர்தன, உபவேந்தர் பேராசிரியர் கோலித பண்டார விஜேசேகர மற்றும் மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றுகையில், ஊவா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை அமைக்க வேண்டும் என்பது பல்கலைக்கழகம் தொடர்பிலான கனவுகளில் ஒன்று அது இன்று நனவாகியுள்ளது. வரலாற்றிலிருந்து பிரதச மக்கள் சமூக அநீதிகளை அனுபவித்துவந்துள்ளனர். அநீதிக்கு ஆளான மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதே எனது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.இன்று ஆரம்பமாகிவுள்ள மருத்துவ பீடத்துடன் பதுளை வைத்தியசாலை யும் போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 600 உள்நோயாளிகளுக் கான படுக்கைகளுடன் கூடிய வாட் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட 14 ஆவது பல்கலைக்கழகம். இந்த பல்கலைக்கழகத்தில் 2005 ஆம் ஆண்டு மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## பட்ஜட்டுக்கு மேலதிகமாக...

எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த 2500 மில்லியன் ரூபாவை சகல மாவட்டங்களுக்கும் விவசாயத்துறை மேம்படுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை உபயோகிப்பதற்காக நூறு மில்லியன் ரூபா என்ற வகையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், ஒரு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு தொகுதிக்காக 25 மில்லியன் ரூபா என்ற வகையில், இந்நிதி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இறக்குமதி பால் மாவின்...

நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அதன்படி, இறக்குமதி செய்யப்படும் 01 கிலோ பால் மா பக்கற்றின் விலை 150 ரூபாவினால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கற்றின் விலை 60 ரூபாவினால் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதே வேளை, வெள்ளை சீனியின் விலை அதிகரித்துள்ளது. புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 20 ரூபாவிலிருந்து 25 ரூபா வரை அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன் 255 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளைச் சீனி, தற்போது 275280 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் பிறந்த... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆரம்பித்து வைத்தார்.இவ் வீதிகள்,49.90 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

பொலன்னறுவை திம்புலாகல பிம்புரத்தேவ வரலாற்றுச் சிறப்பு மிக்க சிலுமின சேய விகாரையின் நுழைவு வீதியின் அபிவிருத்திப் பணிகளையும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆரம்பித்து வைத்தார்.

இதற்கான அழைப்பை நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் விடுத்தருந்தார். திம்புலாகல கெகுலுவெல கொஸ்கஹமுல முதல் மல்தெனிய பிரதான வீதியும் காபட் இடப்படவுள்ளது.

விகாராதிபதி அம்பாறே குசலநாயக்க தேரர் விடுத்த விசேட வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் குறுகிய காலத்தில் இத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் தேசிய தின...

பாகிஸ்தான் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) ஃபஹீம்உல் அஸீஸ், பாகிஸ்தான் தேசிய கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில், பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தேசிய தின விசேட செய்திகளும் வாசிக்கப்பட்டன.

## மழையுடன் கூடிய...

பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். நேற்றைய தினமும் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி இடம்பெற்றதாகவும் இன்றும் அவ்வாறான மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெள்ளவத்தை பகுதி...

தீப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு மாநகர சபையின் 10 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு பல மணித்தியாலங்கள் தீயணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும்

இந்த தீ அனர்த்தத்தில் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

தீயணைப்பு படையினருடன் இணைந்து பொலிசார் மற்றும் பிரதேச வாசிகள் தீப்பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும்மேற்படி தீ அனர்த்ததையடுத்து வெள்ளவத்தை பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தீப் பரவலுக்கான காரணம் மற்றும் சேதங்கள் தொடர்பில் உடனடியாக தகவல்களை வழங்க முடியாதுள்ளதாகள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பாரிய பிரயத்தனத்திற்கு மத்தியில் ஆடையகத்திலிருந்து பணியாளர்கள் மற்றும் பொதுமக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## யாழ். தென்மராட்சி...

திருச்செல்வத்தின் நோக்கமாக அமைந்தது. அதற்கமைய 1,550 கிலோ எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தாடியாலும், 500 மீற்றர் தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் அந்த உலக சாதனையை நிகழ்த்தினார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனைப் புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். வாகனத்தை இழுத்துவந்த செல்லையா திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனையை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வம் அவர்களின் சாதனையை அங்கீகரித்து பதக்கத்தையும், விருதையும், பட்டயத்தையும் வழங்கி அதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களால் வழங்கினர்.

உலக சாதனை நாயகனான செல்லையா திருச்செல்வம் (60) கடந்த பத்தாண்டுகளாக தனது தலை முடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின்மீது வாகனத்தை ஓடவிடுவது போன்ற சாதனைகளைச் செய்து வருகிறார்.

60 வயதான இவர் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையமருகில் 1,550 கிலோ எடையுள்ள வாகனத்தை 1,500 மீற்றர் தூரத்தை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்தார்.

இந்நிகழ்வு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது. இச்சாதனை மூலம் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் செல்லையா திருச்செல்வத்தின் பெயரும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சகோதர மதத்தவர்கள் பேருவளை பிரதேச பள்ளிவாசல்களுக்கு நல்லெண்ண விஜயம்



(அஜ்வாத் பாஸி)

பிற மதத்தவர்களின் சமய நிகழ்வுகளை அறிந்து, தெளிவை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு கொழும்பு 04, பம்பலப்பிட்டி சென் அந்தனிஸ் கல்லூரி மாணவிகள், ஆசிரியைகள் மற்றும் களுத்துறை 'ஹொலி குரொஸ்' பாடசாலை அதிபர் உட்பட முக்கிய பிரமுகர்கள் உள்ளடங்கிய குழுவினர் நல்லெண்ண விஜயமாக பேருவளை தொகுதியிலுள்ள முஸ்லிம்களின் வரலாற்று பிரசித்திபெற்ற கெச்சிமலை பள்ளிவாசல், இலங்கையின் முதல் பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மற்றும் ஜாமியா நளீமிய்யா கலாபீடம் ஆகியவற்றிற்கு (22) நல்லெண்ண விஜயம் செய்து பார்வையிட்டதோடு இஸ்லாம் மார்க்கம் தொடர்பாகவும் பல்வேறு விடயங்கள் குறித்தும் தெளிவை பெற்றுக் கொண்டனர்.

இக்குழுவினர் அன்றைய தினம் மாலை சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு வருகை தந்தனர். இவர்களை சீனன் கோட்டைபள்ளிச்சங்கஇணைச்செயலாளர் சிஹாப் ஹாஜியார், இணைப் பொருளாளர் ஸவாஹிர் ஹாஜியார் தலைமையிலான பள்ளிச்சங்க நிர்வாக சபையினர் வரவேற்றனர். இவர்களுள் கத்தோலிக்க, பௌத்த, இந்து ஆகிய சமயங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும், மதப்பெரியார்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இவர்கள் இஸ்லாம் மார்க்கம், நோன்பு, வணக்க வழிபாடுகள், இன நல்லிணக்கம் தொடர்பிலும் கேட்டறிந்தனர். இவர்களுக்கான தெளிவை பள்ளிவாசலின் பிரதம கதீப் மௌலவி இக்ராம் பாஸி சிங்கள மொழி மூலமாக குறுகிய நேரத்திற்குள் மிகச்சிறப்பாக விளக்கியதோடு அவர்களது கேள்விகளுக்கும் சிறந்த முறையில் தெளிவுகளையும் வழங்கினார். நோன்பு துறக்கும் நேரம் நெருங்கியதால் வருகை தந்தோருக்கு இப்தார் நிகழ்வும் பள்ளிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இப்தாரில் கலந்துகொண்டதோடு பல விடயங்கள் குறித்தும் தெளிவுகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஒலிம்பியாட் போட்டியில் மாணவி சுக்ரியா வெற்றி

( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )



வடமத்திய மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஒலிம்பியாட் கணித அறிவு வினா விடைப் போட்டியில் அநுராதபுரம் மாவட்டம் கெகிராவ கல்வி வலயத்தைச் சேர்ந்த நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 07 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.எஸ். எப். சுக்ரியா சிங்கள, தமிழ் மொழி மூல பாடசாலை மாணவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்று அகில இலங்கை மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளார்.

இவர் இவ்வருடம் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியிலும் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் நேகமயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஜே. அபுல் ஹஸனின் பேத்தியும், எச்.எச். சுஹத், ஏ.எப்.அஸ்னா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியுமாவார்.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QA-2555 Bajaj 2005 threewheel அதியுயர் விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி . 0711 210810. 020121

Repeat Your ad For Better Offers


# ஐ.தே.கவின் நற்பிட்டிமுனை அமைப்பாளராக நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சியினால் நற்பிட்டிமுனை முஸ்லிம் மற்றும் தமிழ் பிரிவுகளுக்கான அமைப்பாளராக ஏ.எச்.எச்.எம். நபார் ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதம் அம்பாறை மாவட்ட ஐ.தே.க. தலைவியும் முன்னாள் பிரதியமைச்சருமான அனோமா கமகேயினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவர் கல்முனை பற்றிமா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமாவார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகத்தில் முகாமைத்துவ கணக்கீட்டு விசேட தத்துவத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறிவித்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**மோட்டார் வாகனத் திணைக்களம்**

**2024.03.06 புதன் கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரமான பத்திரிகை அறிவித்தல் பற்றியது**

தலைமையகத்தில் QR குறியீட்டுடன் சாரதி அனுமதிப்பத்திர காட் நான்கு இலட்சம் (400,000) கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் போட்டி விலைமனுக் கோரல் என்ற அறிவித்தலில் கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் விலைமனுக்கள் திறத்தல் 2024.04.10 பி.ப. 2.00 வரை நீடிக்கப்படுகிறது.

**தலைவர் பெறுகைக் குழு,**
**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,**
**இல. 341, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு -05.**

# 1990 - 04 ம் இலக்க கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ம் பிரிவின் கீழ் விற்பனை

## செலான் வங்கி பீ.எல்.சி - கந்தளை கிளை பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

கந்தளையைச் சேர்ந்த லொக்கு வடுகே அர்ஜுன இசிர அல்விஸ் என்பவர் "கடன் பெற்றவர்/ அடகு வைத்தவர் " என்ற வகையில், பிரசித்த நொத்தாரிசு எல்.பி.ஜே.பீ.ரி. சம்பத் கிறிஷாந்த என்பவரால் 2014-09-11ம் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 330 ம் இலக்க முறியின் கீழும் செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு செலுத்துவதாக உறுதியளிக்கப்பட்ட தொகையை செலுத்தத் தவறியுள்ளமையால் இங்கு அட்டவணைகளில் குறிப்பிடப்படும் ஆதனம்.

**01வது ஏல விற்பனை**

தென் மாகாணம் காலி மாவட்டம், வெல்லமட பற்று அம்பலாந்தொட்ட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குள், இலக்கம் 75 பட்டபொல மேற்கு கிராமசேவகர் பிரிவிற்குள், விதுகல்பிட்டிய கிராமத்தில் அமைந்திருக்கும் "மாவத்த படஹெல்ல உடுமுல்ல மற்றும் படதோன உடுமுல்லகெலே கல்வெல உடுமுல்ல பத்த" என அழைக்கப்படுவதும் பீ.பீ.ஏ.1227ம் இலக்க நில அளவைப் படத்தில் லொட் "2" மற்றும் "4" என வரையறுக்கப்பட்டு பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட ஆதனத்தின் பரப்பளவு ஒரு ஏக்கர், மூன்று றூட் இருபத்தொன்பது பேர்ச் (ஏ.1- றூ.3 பே.29) காணியாகும். அத்துடன்

1. மேற்படி காணி உத்தரவு பெற்ற நில அளவையாளரான பேர்டி ஏ.டீ. சில்வா என்பவரால், மீண்டும் நில அளவை செய்யப்பட்டு 2008.08.15 ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2008/50 ம் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டான லொட் 01டன் பரப்பளவு ஆறு பேர்ச் (ஏ.0- றூ.0- பே.066 அத்துடன் 2008.08.15 ம் திகதியிடப்பட்ட 2008/50ம் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட லொட் 7 மற்றும் 8 காணித் துண்டுகளின் மேல் செல்லும் பாதைக்கான உரித்துடனுமாகும்.
2. மேற்படி காணி உத்தரவு பெற்ற நில அளவையாளரான பேர்டி ஏ.டீ. சில்வா என்பவரால், மீண்டும் நில அளவை செய்யப்பட்டு 2008.08.15 ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2008/50 ம் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டான லொட் 04 ன் பரப்பளவு பதினான்கு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.14) அத்துடன் 2008.08.15 ம் திகதியிடப்பட்ட 2008/50ம் இலக்க நில வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்ட லொட் 7 காணித் துண்டின் மேல் செல்லும் பாதைக்கான உரித்துடனுமாகும்.

**மேற்சொல்லப்பட்ட ஆதனத்தை சென்றடையும் வழி**: அம்பலாங்கொட நகரத்திலிருந்து பட்டபொல வீதி ( திலக்கபுர ஊடாக) வழியாக 8 கி.மீ. பொல்லேவெல சந்திவரை சென்று வலது பக்கம் திரும்பி கஹவ வீதி வழியாக 01 மீட்டர் வந்து (D.M.G. சுனில் அவர்களின் வீடு வரை) சென்று இடது பக்கம் திரும்பி 60 மீட்டர் வந்ததன் பின் இந்த காணி பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு**

**செலான் வங்கி பீ.எல்.சி.யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளை வளாகத்தில்**

**என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும் (வாடிக்கையாளர் வாகன நிறுத்துமிடத்தில்)**

தீர்மானம் சம்மதிக்கப்பட்டதற்கான அறிவித்தல்: 2018.09.28ம் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2018.10.09ம் திகதியிடப்பட்ட தினமினயிலும் டெயிலிநியூஸ் மற்றும் தினக்குரல் பத்திரிகையிலும் வெளியிடப்பட்டுள்ளது. பணம் செலுத்தும் முறை ஏலவிற்பனை முடிவடைந்தவுடன் வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வருமாறு கொடுப்பனவுகளை பணமாக செலுத்துதல் வேண்டும்.

(01) கொள்முதல் விலையின் 10 % யும்
(02) உள்ளூராட்சி அதிகாரசபைக்கான வரி 1%
(03) ஏல விற்பனையாளரின் கமிஷன் தொகை 2.5%
(04) நொத்தாரிஸ் விற்பனை பத்திரத்திற்கான நொத்தரிஸ் கட்டணம் 2000/-ரூபா
(05) எழுது வினைஞர் மற்றும் அறிவிப்பாளர் கட்டணம்: 500/- ரூபா.
(06) இந்த விற்பனைக்காக செலவு செய்யப்பட்ட விளம்பர செலவு.
(07) கொள்முதல் விலையின் மிகுதியான 90% தொகை மற்றும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் அல்லது உரிய அதிகார சபைகளினால் விதிக்கப்படும் சட்டப்பூர்வமான விதிப்புக்கள், வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் யாவும் ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்கிடையில் செலான் வங்கி பீ.எல். சீ.யிடம் வைப்பிடப்படல் வேண்டும். உரிய குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கிடையில் வைப்பிடப்படுதல் தவறப்படுமேயானால், ஏலம் கேட்பவரினால் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படுவதோடு புதிய ஏல விற்பனை நடாத்தப்படுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

சம்மந்தப்பட்ட உரித்துக்கான உறுதிகளை கொழும்பு-03, காலி வீதி, இலக்கம் 90, செலான் டவர்ஸ், செலான் பீ.எல்சி.இன் தலைமையகத்தில் சட்டப் பிரிவில் பார்வையிட்டு பரிசோதனை செய்யலாம். தொ.பே. 011-2456485, 011-2456479 மற்றும் 011-2456473.

**சந்தீமா பிரியதர்சினி கமகே**
**நீதிமன்ற ஆணையாளர்,**
**பகிரங்க ஏல விற்பனையாளரும்**
**விலை மதிப்பீட்டாளரும்**

**இலக்கம் : 9-1 ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்தை, பனாகொட**
**ஹோமாகம**
**தொ.பே. 0714318252 - 011-2173282**

# 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் (8)3 பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்.

இல. 811, துட்டுவெவ, கலென்பிந்துனுவெவ முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல.: 197412202345 கொண்ட குருகம கெதர மெத்சாந்த செனவிரத்ன என்பவரின் பெயரில் பதிவு செய்துள்ள இல. NC PG 7882 (செசி இலக்கம் : KDH 201-0165611, என்ஜின் இலக்கம் : 1KD - 2513132) என்ற KDH வேனை அகற்றுவதை அல்லது கைமாற்றுவதை தடுக்கும் முகமாக 2024.01.01ம் திகதி குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் விசாரனை பிரிவின் உதவிப் பொலிஸ் அதிகாரி ஒருவரினால் 2011 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல 05 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை ஹோமாகம நீதிமன்றத்தினால் இல. SPL 01/2024 என்ற வழக்கின் கீழ் 2024.01.10ம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை மேற்படி சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் 2024.04.10 வரை 03 மாதம் அமுலாகுமாறு மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சொத்துகளை தமது உரிமைக்கோரல் சட்டத்தின் 14ம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக இங்கு அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

# ரஜரட்ட பிரதேசத்தில் கடும் உஷ்ணம் விவசாய செய்கை பாதிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

ரஜரட்ட பிரதேசத்தில் இக்காலப் பகுதியில் நிலவும் அதிகரித்த வெய்யில் மற்றும் கடுமையான உஷ்ணம் காரணமாக தமது அன்றாட விவசாய நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்து வருவதாக ரஜரட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இக்காலப் பகுதியில் ரஜரட்டை பகுதியில் பெரும் போக நெல் அறுவடை காலம் என்பதால் இம்முறை ஏற்பட்டுள்ள அதிக வெப்பம் அதிக வெயில் காரணமாக உரிய விவசாய நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட முடியாத நிலை காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் கால்நடை வளர்ப்பாளர்களும் தமது கால் நடைகளை மேய்ச்சல் தரைகளுக்கு கொண்டு செல்வதில் கஷ்டம் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு இப் பகுதிகளில் ஒரு சிறிய அளவிலான மழை பெய்த போதிலும் மீண்டும் உஷ்ணமான நிலை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கும் இவர்கள், பெய்த மழை எள்ளு விதைத்தவர்களுக்குரிய "எள்ளு மழையே" தவிர வேறு மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**2024/2025ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்**

1. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு 2024-2025 ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவைக் காலமானது 365 நாட்களாகும்.
3. விலைக்கோரல் தேசிய போட்டி விலைக்கோரல் (NCB) மூலம் நடத்தப்படும்.
4. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு இந்த வருடங்களுக்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான தகுதியாக பாதுகாப்பு அமைச்சின் உரிமத்தை விலைமனுதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
5. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபாய்) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெயரில் இலங்கை வங்கி, கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7120156 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-03.25 ஆம் திகதி முதல் 2024.04.15 ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM) பெற்றுக்கொள்ளலாம்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் அடங்கிய முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறைகளின் மேல் இடது மூலையில் ''2024-2025 ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குதல் எனக் குறிப்பிட்டு, ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு 2024.04.16 ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2024.04.16 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் 01ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
7. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. இது தொடர்பான மேலதிக விபரங்களை வேலை நாட்களில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுகைகளுக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011 2208300)
9. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
10. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் தரவில் தரப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்.**

# அரசினால் ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 53 கிராம சேவகர் பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதி அமைச்சினால் மூன்று கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வலஸ்முல்ல பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் ஊடாகவே பிரதேச அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காகவே இத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு இத் திட்டத்தினூடாக நிறைவு செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்படவுள்ளன.







# நாட்டை முதன்மைப்படுத்தி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம்

## 'ஜயகமு ஸ்ரீலங்கா' மாத்தளை நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார



நாட்டை முதன்மைப்படுத்தி, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவை வலுப்படுத்துவதே எமது நோக்கம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார (22) தெரிவித்தார்.

'ஜயகமு ஸ்ரீலங்கா' மக்கள் நடமாடும் சேவையின் ஏழாவது நிகழ்வு மாத்தளையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் கருத்தை கூறினார். தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அனைத்து சேவைகளையும் பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அமைச்சர் தொடர்ந்து இங்கு பேசுகையில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன எமது பொருளாதார கொள்கையை மாற்றியமைத்ததால் நாட்டில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஒவ்வொரு முறையும் இந்த நாடு பொருளாதாரத்திலிருந்து மீள முயற்சிக்கும் போது எப்பொழுதும் பெருமை பேசும் இந்தக் குழு, ஆயிரக்கணக்கான இளைஞர்களை தவறாக வழிநடத்தி கலவரத்தில் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்க்கையை அழித்துள்ளது. இது வரலாறு முழுவதும் பல சிக்கல்களுக்கு வழிவகுத்தது. இவ்வாறானவர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மூன்று தசாப்தகால ஆயுத மோதலை முடிவுக்கு கொண்டுவர துணிச்சலான முடிவுகளை எடுத்தோம். அத் தருணத்தைப் போலவே, ஒரு தேசமாக இந்த நாட்டை சிறந்த எதிர்காலத்திற்காக அபிவிருத்தி செய்ய துணிச்சலான மற்றும் நேர்த்தியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இது ஒரு முக்கியமான தருணம். நாம் அரசியல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், இஸ்ரேல், தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட வேலை வாய்ப்புகளை நாடு முழுவதும் வழங்கியுள்ளேன்.

அவ்வாறே இஸ்ரேலில் இருந்து பெறப்பட்ட வேலைவாய்ப்புக்கள் நாடு முழுவதும் சமமாக விநியோகிக்கப்படும். இவை ஒருபோதும் எனது தனிப்பட்ட இலாபத்துக்காக பயன்படுத்தப்படாது என்று நான் உறுதியளிக்கிறேன்.

இவ்வேலை வாய்ப்புகளுக்காக இளைஞர்கள் சென்றவுடன் , அவர்களின் குடும்பங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.நம்நாடு தெற்காசியாவிலேயே அதிவேக சுற்றுலா வளர்ச்சியை அடைந்து, உலகின் முதல் பத்து இடங்களில் ஒன்றாக மாறியுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 600,000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# முட்டை விலையை விரைவில் 30 ரூபாவாக குறைக்க முடியும்

## சபையில் அமைச்சர் மஹிந்த அமரவீர

லோரன்ஸ் செல்வநாயகம்



முட்டை விலையை எதிர்காலத்தில் 30 ரூபாவாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முட்டை உற்பத்தியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பயனாக தற்போது அவர்கள் சதொச விற்பனை நிலையங்களுக்கு 40 ரூபாவுக்கு முட்டைகளை வழங்க தீர்மானித்துள்ளனர் என குறிப்பிட்ட அமைச்சர், எதிர்வரும் காலங்களில் அதனை முப்பது ரூபாவாக்க முடியும் என்றும் சபையில் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், முட்டை விலைகள் எதிர்காலத்தில் மேலும் குறைவடையும்.முட்டை உற்பத்தியாளர் சங்க முக்கியஸ்தர்களுடன் நான் கடந்த வாரம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். அதன் போது அவர்கள் 40 ரூபாவுக்கு தம்மால் சதொச விற்பனை நிலையங்களுக்கு முட்டைகளை வழங்க முடியும் என தெரிவித்தார்கள்.

அதனை அவர்கள் ஊடகங்கள் மூலமும் உறுதிப்படுத்தினார்கள்.

அந்த வகையில் 60, 65 ரூபா வரை சென்ற முட்டை விலை தற்போது 40 ரூபாவாக குறைவடைந்துள்ளது என்பதை குறிப்பிட வேண்டும். அதனை 30 ரூபாவுக்கு கொண்டு வருவதற்கு நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# றோயல் கல்லூரி மாணவன் எழுதிய மூன்று கவிதை நூல்கள் வெளியீடு

உடப்பு குறூப் நிருபர்



கொழும்பு றோயல் கல்லூரியின் உயர் வகுப்பு விஞ்ஞானப் பிரிவு மாணவனும் இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் வஸ்தியாம் பிள்ளை சிவலோகதாசனின் மூத்த புதல்வனுமாகிய சி. சதுர் எழுதிய ஜீவநதி வெளியீடான கொரோனா, கசக்கும் கவிதைகள், குருதிச் சாரல் ஆகிய மூன்று கவிதை நூல்கள் வெளியீட்டு நிகழ்வு கடந்த செவ்வாய் கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் தலைமை வகித்தார்.

இவ் வெளியீட்டு நிகழ்வில் வரவேற்பு நடனத்தை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி. சிவலோகதாசன் ருத்னா ஆற்றுகை செய்தார். வரவேற்புரையினை புத்தளம் ஒற்றைப்பனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அதிபர் க. சிவானந்தகுமாரன், வெளியீட்டுரையினை பேராசிரியர் வஸ்தியாம் பிள்ளை சிவலோகதாசன் நூல்களின் நயவுரையினை முனைவர் இராமநாதன் ஸ்ரீ ஞானஸ்வரன் மாயனும் நிகழ்த்தினர்.

நூல்களின் முதற்பிரதியினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அன்பழகன் அரியதுரை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து அரங்கில் சிறப்பு பிரதிகளை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் வீரகேசரி பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் வீ. தனபாலசிங்கமும் தொடர்ந்து அதிதிகளும் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

# ஈரான் நாடு வழங்கும் புலமைப்பரிசிலை இம்முறை புத்தளத்துக்கு வழங்குவோம்

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளம் மாவட்ட மாணவர்களுக்கு இலவச புலமைப் பரிசில்களை வழங்குமாறு புத்தளம் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டாளர்களின் வேண்டுகோளையேற்று "வரையறையற்ற புலமைப் பரிசில்களை இம்முறை புத்தளத்துக்கு வழங்குவோம்" என்று ஈரான் கலாசார உயர் அதிகாரி டொக்டர் பஹுமான் மொஸாமி வாக்குறுதியளித்தார்.

ஈரான் கலாச்சார கண்காட்சியும் திரைப்பட விழாவும் புத்தளம் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், பிரதம அதிதியாக ஈரான் கலாசார நிலையத்தின் கலாசார உயர் அதிகாரி டொக்டர் பஹுமான் மொஸாமி கண்காட்சி கூடத்தை ஆரம்பித்து வைத்ததோடு காட்சி பொருட்கள் தொடர்பில் விளக்கங்களையும் வழங்கினார்.

நிகழ்வில் உரையாற்றிய அரசியல் பிரமுகர்கள், புத்தளம் ஈரானுடனான தொடர்பை பற்றியும், இலங்கையில் பாடசாலை மாணவிகள் பர்தா அணிவதற்காக புத்தளத்தில் நடாத்திய புரட்சியும், பர்தா அணிகளை ஈரான் கப்பல்களில் அனுப்பி வைத்த வரலாற்று நிகழ்வையும் பறைசாற்றினர்.

# வீதி விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்

கெக்கிராவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட கணேவல்பொல பிரதான வீதியில் அம்புல்கஸ்வெவ பிரதேசத்தில் கடந்த (21) மாலை இடம் பெற்ற விபத்தில் 12 வயதுடைய மாணவன் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.இவ்வாறு கவலைக்கிடமான முறையில் உயிரிழந்தவர் கடந்த 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுபுள்ளிக்கு கூடுதலான புள்ளிகளைப்பெற்று கெக்கிராவ பஸ்டியன் சில்வா மகா வித்தியாலயத்தில் தரம் 06 ல் கல்வி பயின்று வரும் 12 வயதுடைய குஷல யுவகுஷ் சதீர என்ற மாணவனாவர்.

கெக்கிராவ நகரில் இருந்து அம்புல்கஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு பஸ்ஸில் சென்று இறங்கி வீதியை கடக்கும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கிழக்கின் குரல்



# சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடம் விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்க முடிவு



சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தினை மக்கள் பாவனைக்காக விரைவில் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் சம்மாந்துறை வைத்தியசாலையின் புதிய கட்டடத்தினை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிப்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சனிக்கிழமை (23) சம்மாந்துறை வைத்தியசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினருடன் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட்டனர்.

இதன் போது குறித்த வைத்தியசாலையின் புதிய கட்டட நிர்மாணங்களை பார்வையிட்ட சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி மஹிபால தலைமையிலான அதிகாரிகள் பாராட்டியதுடன் வைத்தியசாலைக்கு இரண்டாம் கட்டமாக பல மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்மாணப்பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அவ்விடத்தில் உறுதியளித்தார்.

மேற்குறித்த களவிஜயத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம் ஆசாத் ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர். நியாஸ் அஹமட், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். சீ. எம். மாஹிர், உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் அடுத்தகட்ட பணிகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலைகளில் அத்தியட்சகர்களையும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

அத்துடன் சுகாதார இராஜாங்க அமைச்சராக பதவிவகித்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அயராத முயற்சியின் மூலம் நிந்தவூர் மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் சம்மாந்துறை, பொத்துவில், ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் கட்டட நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பின்னர் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நிர்மாணப்பணிகள் தாமதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈரளகுளம் வேலோடும் மலை

# ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அன்னதான மண்டபம் வைபவரீதியாக திறப்பு

காரைதீவு குறூப் நிருபர்



இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் வரலாற்று பிரசித்தி பெற்ற ஈரளகுளம் வேலோடும் மலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அன்னதான மண்டபமொன்று திறந்து வைக்கப்பட்டது.

வேலோடுமலை முருகன் ஆலய தர்மகர்த்தா எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெற்ற அன்னதான மண்டப திறப்பு விழாவில், இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைத்தார்.

லண்டனில் வாழும் திருமதி ஜீவா தேவி வரதராஜன், காலஞ் சென்ற மயில்வாகனன் வரதராஜன் AVS அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த அன்னதான மண்டபத்தை இராமகிருஷ்ண மிஷன் வேண்டுகோளின்படி நிறுவியுள்ளனர்.

இந்த பணியில் இராமகிருஷ்ண மிஷன் தொண்டர் கருணாநிதி பொறுப்பேற்று முருகன் ஆலயத்தின் தலைவர் தியாகராஜாவின் ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்பட்டன. அன்னதான மையத்தோடு இணைந்து சமய நூல்கள் மற்றும் இராமகிருஷ்ண மிஷனால் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

# வீட்டில் தனிமையாக தூங்கிய நபர் மீது வாள்வெட்டு தாக்குதல்

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தனிமையாக வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞரொருவர் மீது வாள் வெட்டு தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று (24) இடம் பெற்றுள்ளது.

நண்பர்களுடன் இரவு விருந்துபசாரம் ஒன்றிற்கு சென்று வீட்டுக்கு வந்து தனிமையாக உறங்கிக் கொண்டிருந் த போது இனந்தெரியாதோரினால் வாள் வெட்டு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவரகின்றது.

இத னை யடுத்து, வாளால் வெட்டிய நிலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தொலைபேசி மூலம் சகோதரிக்கு தெரியப்படுத்தியதாகவும் இதனையடுத்து 1990 என்ற அவசர அம்பியூலன்ஸ் வண்டிக்கு அழைப்பு விடுத்ததாகவும் தெரியவந்துள்ளது.இவ்வாள் வெட்டு தாக்குதலினால் திருகோணமலை மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த கே.ஜே.எஸ்.பிரசன்ன குமார (27வயது) இளைஞர் காயம் அடைந்துள்ளார்.

தலையில் பாரிய காயம் ஏற்பட்டுள்ள நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# சிவநேசதுரை சந்திரகாந்தன் எழுதிய 'ஈஸ்டர் படுகொலை' நூல் வெளியீடு

மட்டக்களப்பு குறூப் நிருபர்





கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை இன மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் நூல் வெளியிட்டு விழா சனிக்கிழமை (23) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மங்கல விளக்கேற்றப்பட்டு சர்வமத தலைவர்களின் ஆசியுரை, அழகிய வரவேற்பு நடனம் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, நூலாசிரியரினால் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதல் பிரதிகள் ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளிற்கு வழங்கி வைத்ததைத் தொடர்ந்து, சர்வமத தலைவர்களுக்கும் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சந்திரோதயம் கலை இலக்கியப் பெருமன்றத்தினால் வெளியிடப்பட்ட இன மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இப்புத்தகமானது நூலாசிரியரின் இரண்டாவது நூலாக திகழ்கின்றது. கடந்த 2019 ஆண்டு இடம் பெற்ற ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பாக இராஜாங்க அமைச்சரினால் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாக இந்நூல் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வள்ளிபுரம் கணகசிங்கம், இராஜாங்க அமைச்சரின் தாயார் கமலா சிவநேசதுரை உள்ளிட்ட திணைக்கள தலைவர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

# யாழ் பல்கலையில் சர்வதேச இந்து மாநாடு




"இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாநாடு தலைவர் ச பத்மநாபன் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா சகிதம் விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். விருந்தினர்களின் மக்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வரவேற்புரையை மாநாட்டின் செயலாளர் பேராசிரியர் வி.பவனேசன் நிகழ்த்தியதுடன் பிரதம விருந்தினர் உரையை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டின் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு.நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கப்பட்டது. *(யாழ். விசேட நிருபர்)*

## வவுனியாவில் இடம்பெற்ற ரெலோவின் 11 வது தேசிய மாநாடு



**வவுனியா விசேட நிருபர்**

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) 11வது தேசிய மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (24.03) நடைபெற்றது.

கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முன்னதாக கட்சியின் கொடியேற்றப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

விடுதலை போராட்டத்திற்காக உயிர்நீத்த அனைத்து பொதுமக்களுக்கும், போராளிகளுக்குமாக ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் மாநாட்டுப் பிரகடணம் வாசிக்கப்பட்டதுடன், சிறப்புரைகளும் இடம்பெற்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தம் கருணாகரம், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுனருமான செந்தில் தொண்டமான்,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## நிமோனியா காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐந்து வயது சிறுவன் ஒருவன் நிமோனியா காய்ச்சலினால் உயிரிழந்துள்ளான்.

அராலி மத்தி அராலியைச் சேர்ந்த கிருபாகரன் சிலக்சன் (வயது05) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

கடந்த வெள்ளிக்கிழமை(22) காலையில் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் சிறிது நேரத்தில் காய்ச்சல் அதிகரித்து சிறுவன் மயக்கம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நள்ளிரவு 12.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

# வடக்கின் உதயம்

## சோளப் பயிர்ச் செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம்




**வவுனியா விசேட நிருபர்**

சோளப் பயிற் செய்கைக்கான விதைப் பதப்படுத்தும் நிலையம் விவசாய அமைச்சர் மகிந்த அபயவீரவினால் வவுனியாவில் (23.03) திறந்து வைக்கப்பட்டது.

வவுனியாவிற்கு விஜயம் செய்த விவசாய அமைச்சர் மகிந்த அபயவீர பூவரசன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படும் நல்லின சோளப் பயிற்செய்கை நிலங்களை பார்வையிட்டதுடன், பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, வவுனியா, நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட சோள விதை பதப்படுத்தும் மற்றும் விதை உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்ததுடன், அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டதுடன், நிலையத்தில் விவசாயிகளுக்காக அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தையும் திறந்து வைத்து, வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழில். பால் புரைக்கேறி 28 நாள் சிசு உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

பால் புரைக்கேறியதில் 28 நாள் சிசுவொன்று யாழில் உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சசிக்குமார் பிரதீபா எனும் சிசுவே உயிரிழந்துள்ளது.

தாயார் வெள்ளிக்கிழமை சிசுவுக்கு பால் ஊட்டி விட்டு, குழந்தையை படுக்க வைத்துள்ளார்.

சிறிது நேரத்தில் குழந்தை அசைவின்றி காணப்படுவதனை அவதானித்து, குழந்தையை எழுப்பிய போது குழந்தை மயக்கமான நிலையில் காணப்பட்டமையால், குழந்தையை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## வவுனியாவில் காசநோய் விழிப்புணர்வு ஊர்வலம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்று (24.03) இடம் பெற்றது.

ஊர்வலம் வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில் வைத்தியசாலை பின் வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்' எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினமான நேற்று விழிப்புணர்வு கருத்துரைகள் இடம்பெற்றது.



கண்டி நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்



## மத்திய மாகாணத்தில் ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கல்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

மத்திய மாகாணத்தில் நீண்ட காலமாக இழுபறி நிலையிலிருந்த ஆசிரியர் உதவியாளர்கள் மற்றும் தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமாக்களை நிறைவு செய்த 145 பேருக்கு மத்திய மாகாண ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் தொலைதூர பிரதேசங்களில் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் பணிபுரிய இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திற்கு 78 ஆசிரியர்களும், மாத்தளை மாவட்டத்திற்கு 04 ஆசிரியர்களும், கண்டி மாவட்டத்திற்கு 54 ஆசிரியர்களும், 9 தேசிய கல்வி விஞ்ஞான டிப்ளோமாதாரர்களும் இந்நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ,

பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேம சிங்க, ஆளுனரின் செயலாளர் திருமதி மஞ்சுல மாடப்பொல,

மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக்க ஹேரத், மாகாண சபையின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சர்வ சமயப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு




**இக்பால் அலி**

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்லூரியின் அபிவிருத்திக் குழு, முஸ்லிம் மஜ்லிஸ் மாணவிகள் இணைந்து நடத்திய விசேட இப்தார் நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி கல்வி வலய அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ரஸீகா கலுப்பானகே, உதவிக் கல்விப் பணிப்பாளர் பௌசுல் அமீன், கண்டி மாநகர சபையின் ஆணையாளர் இஸ்ஹான் விஜயதிலக, பௌத்த பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எம். சி. கமால்ஹஸன், கண்டி மாநகர முன்னாள் பிரதி முதல்வர் இலாஹி ஆப்தீன் மற்றும் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயப் பெரியார்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# மலைச்சாரல்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளராக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முருகேசு தீபன் நியமிக்கப்பட்டார். கட்சியின் தலைவரும் ஆறாவது நிறைவேற்று முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

LSC

**செவனகல பிரிவு**

## பதவி வெற்றிடங்கள்

மொனராகலை மாவட்டத்தின் செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள (எம்பிலிப்பிட்டிய நகரத்திற்கு அருகில்) அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தில் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### 01. பொதுமுகாமையாளர் – 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- பொருளாதாரம், கணக்கியல், முகாமைத்துவம், வர்த்தகம், கணிதம், விவசாயம் அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்றிருத்தல்

அத்துடன்

- அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தினால் நிறுவப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்தில்" குறைந்தபட்சம் 20 வருட பணி அனுபவம்

### பிரதான உள்ளக கணக்காள்வாளர் - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- கணக்கியலை ஒரு முக்கிய பாடமாக சேர்க்கப்பட்ட முகாமைத்துவம் அல்லது வணிகத்துறையில் பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றிருத்தல்

அத்துடன்

பட்டம் பெற்ற பின்னர் கணக்காய்வு துறையில் குறைந்தது எட்டு (08) வருட பணி அனுபவம் மற்றும் 05 வருடங்கள் நிறைவேற்று தரத்தில் பணியாற்றல்.

அல்லது

- அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனத்தில் கணக்கியலில் தொடர்பாக நடுநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, தகுதி பெற்ற பின்னர், கணக்குத் துறையில் குறைந்தபட்சம் எட்டு (08) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும், அதில் 05 ஆண்டுகள் நிர்வாக தரத்தில் இருக்க வேண்டும்.

### 03. இராசயனவியல் பொறியியளாலர் - 05 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்ததினால் வழங்கப்படும் இரசாயனவியல் பொறியியலில் நான்கு வருட முழுநேர இளங்கலைப் பட்டம் மற்றும் இணை அங்கத்துவம் பெற்றிருத்தல். (AMIE - IESL)

அத்துடன்

- சம்பந்தப்பட்ட பொறியியல் துறைக்காக இலங்கை பொறியியல் நிறுவகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று பரீட்சை மற்றும் பரீட்சைகளை பூர்த்தி செய்து சித்தியடைந்து அதனுடன் தொடர்புடைய அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

அல்லது

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலில் இளமானிப் பட்டத்திற்கு சமமான பட்டப்படிப்பில் சித்தியடைந்து இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (Associate Membership) இணை அங்கத்துவத்திற்கான தகுதிகளை பூர்த்தி செய்திருத்தல்.

### 04. இயந்திரப் பொறியியளாலர் - 02 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்ததினால் வழங்கப்படும் இயந்திரப் பொறியியலில் நான்கு வருட முழுநேர இளங்கலைப் பட்டம் மற்றும் இணை அங்கத்துவம் பெற்றிருத்தல். (AMIE - IESL)

அத்துடன்

- சம்பந்தப்பட்ட பொறியியல் துறைக்காக இலங்கை பொறியியல் நிறுவகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று பரீட்சை மற்றும் பரீட்சைகளை பூர்த்தி செய்து சித்தியடைந்து அதனுடன் தொடர்புடைய அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

அல்லது

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியலில் இளமானிப் பட்டத்திற்கு சமமான பட்டப்படிப்பில் சித்தியடைந்து இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (Associate Membership) இணை அங்கத்துவத்திற்கான தகுதிகளை பூர்த்தி செய்திருத்தல்.

### 05. விவசாய அதிகாரி - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானம், விவசாயத்தினை பிரதான பாடமாகக் கொண்டு சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருட அனுபவத்துடன் பட்டம்.

### 06. விவசாய உதவியாளர் - 02 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியிலிருந்து விவசாயம் தொடர்பாக ஒரு வருடம் / மூன்று வருட (முழுநேர) டிப்ளமோ பட்டம் (NVQ 5/6) விவசாயத் துறையில் இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட தகுதிகளுடன், அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்

- பொது முகாமையாளர் பதவிக்கு 35 வயதிற்கு குறையாத 55 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- ஏனைய பதவிகளுக்கு 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்குறிய கடமைகளைச் செய்வதற்கும் பணியாளர்கள் குழுவினால் நியமிக்கப்பட்ட இடத்தில் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்திர தன்மையினை கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த குணநல ஒழுக்காற்றலை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு கவர்ச்சிகரமான சலுகைகள் மற்றும் தங்கும் வசதிகள் மற்றும் பிற நலன்புரி வசதிகள் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் தினசரி வேலை நேரம் மற்றும் அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் வார இறுதி நாட்களிலும் கடமைபுரிய கூடியவராக இருத்தல் வேண்டும் மற்றும் குறைந்தளவிலான விடுமுறையை எடுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் கொடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் பூர்த்தி செய்து, இந்த விளம்பரம் வெளியான நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். உரிய தேதிக்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**
**இலங்கை**

SELACINE

## சுத்திகரிப்புச் சேவைகளை நடாத்திச் செல்வதற்காக விலைமனுக்கள் கோரல் – 2024

கொழும்பு-07, ஸ்ரீமத் மார்கஸ் பெர்னாந்து மாவத்தையில் 0.4191 ஹெக்டயர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ள 04 மாடிகளைக் கொண்ட தொல்லியல் திணைக்களக் கட்டிடம் மற்றும் இடப்பரப்பை 2024-05-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்தினுள் சுத்திகரிப்புச் சேவையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட விலைமனுதாரர்களிடமிருந்து மட்டும் தொல்லியல் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-04-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்.

ii. அரச துறையில் / தனியார் துறையில் குறைந்தபட்சம் 5 வருட காலம் ஏற்புடைய துறையில் திருப்திகரமான அனுபவம் இருத்தல் (குறைந்தபட்சம் 16 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்திய நிறுவனமாகவிருத்தல் வேண்டும்)

iii. குறைந்தபட்சம் 16 பணியாட்களைக் கொண்ட பணியாட்தொகுதியொன்று இருத்தல். (கடந்த 12 மாத காலத்தினுள் அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ததை உறுதி செய்யும் ஆவணங்களின் சான்றுபடுத்திய பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. சுத்திகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் (தரையை மினுக்குதல், தூசுகளை அப்புறப்படுத்தும் இயந்திரம்) நிறுவனம் வசம் இருத்தல்.

(கவனிக்கவும்: விண்ணப்பப் படிவத்துடன் மேற்படி i முதல் iii வரையான தகுதிகளை காட்டும் குறித்த சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்)

1. 2024-03-25ஆம் திகதி முதல் 2024-04-15ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு-07, ஸ்ரீமத் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, தொல்லியல் திணைக்களக் கட்டிடத்தின் 01ம் மாடியில் உள்ள கணக்கிடல் பிரிவில் இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. 2024-04-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கணக்கிடல் பிரிவிற்கு விலைமனுதாரரின் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிப் படிவங்களில் மட்டுமே விலைமனுக்களைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அந்த மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையை இந்தத் திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர் தமது விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட கோரும் போது செலுத்தக்கூடிய 77,000.00 ரூபா (எழுபத்தேழாயிரம்) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை / வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-04-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தொல்லியல் திணைக்களம், ஸ்ரீமத் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தொல்லியல் திணைக்களத்தின் 1ஆம் மாடி கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொல்லியல் திணைக்களத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

5. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் நிறைவடைந்த உடனடுத்து 2024-04-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு தொல்லியல் திணைக்களத்தின் 1ஆம் மாடி கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

6. மேலும் விபரங்கள் தேவையானால் அந்த விபரங்களை இந்தத் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **தொலைபேசி இலக்கம் -** | **தலைமை கணக்காளர்** | - 011-2667154 |
| | **கணக்காளர்** | - 011-2694728 |
| | **பணிப்பாளர் பராமரிப்பு** | - 011-2692844 |

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

DRP

## விலைமனுக்கோரல் (IFB)

**கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம், நிறுவல், செயல்படுத்தல், மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை.**

**IFB No: DRP/ACC/07/01/2024**

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு கடித உறை அச்சிடும் இயந்திரங்கள் (02 Nos) வழங்கல், விநியோகம்,நிறுவல், செயல்படுத்தல், மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை. பராமரிப்பதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB).

03. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் **0115226172** மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப்பிரிவில், **"சி" பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் (**www.drp.gov.lk**). மூலமாக **2024.03.25** முதல் **2024.04.18** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

04. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.03.25** ஆம் திகதியிலிருந்து **2024.04.18** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் "சி" பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாய் (ரூ.5,000.00)** மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்) 2024.04.19** ஆம் திகதி **பி.ப.02.00** மணித்தியாலங்களுக்கு முன் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "சி"** பகுதி, **12 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. மனு தொடர்பான கூட்டம் **2024.04.02 ஆம் திகதி பி.ப 2.00** மணிக்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், "சி" பகுதி, **13ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** இடம்பெறும்.

07. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட **ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் (100,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

SELACINE

The Housewives' companion
Classifieds on
Daily News

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# சிவில் பாதுகாப்பு திணைக்களம்

## விலைமனுக்கோரல்

01. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு காலணிகளை கொள்வனவு செய்வதற்காக திறந்த திறந்த மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பொருள் | தேவைப்படும் அளவு | மனு ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படும் திகதி | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி | சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி | மீள்செலுத்தப்படாத மனுக்கட்டணம் (ரு) |
|---|---|---|---|---|---|---|
| 01 | கென்வஸ் காலணிகள் (கருப்பு) | 33052 | 2024.03.26 | 2024.04.16 | 2024.04.25 | ரூ. 5000.00 |

02. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. மேலே குறிப்பிட்டுள்ள மீளச்பெற முடியாத கட்டணத்தை பணமாக செலுத்திய பின்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப.09.00 மணி** முதல் **பி.ப.03.00 மணி** வரை நிதிப் பிரிவில் பொருளாலரிடம் செலுத்தி மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்கள் **நகல் பிரதிகள் இரண்டுன்** சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் இரண்டாவது நகல் முத்திரையிடப்பட்டு இறுதித் திகதிக்கு முன்னதாக அசல் உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான ஏலதாரர்கள் மீளப்பெறமுடியாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் - வழங்கல்**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்,**
**ஜெய மாவத்தை, கட்டுபெத்த,**
**மொரட்டுவ.**

**பணிப்பாளர் நாயகம்,**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்.**

**பணிப்பாளர் வழங்கல் : 011-2044854/5**
**தொலைநகல் இல : 011-2044855**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்

## சிங்கள மற்றும் ஹிந்து புதுவருட விடுமுறை அறிவித்தல்

சிங்களம் மற்றும் ஹிந்து புதுவருட உற்சவத்தை முன்னிட்டு 2024-04-11ஆம் திகதி முதல் 2024-04-17ஆம் திகதி வரை அலுவலகம் மூடப்பட்டிருக்கும் எனவும், மீண்டும் 2024-04-18ஆம் திகதி (வியாழக்கிழமை) அலுவலகம் திறக்கப்படும் என்பதுடன் 2024-04-18ஆம் திகதி முதல் அங்கத்தவர்களின் வேலைகள் இடம்பெறும் என்பதுடன் 2024-04-02ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை), 2024-04-08ஆம் திகதி (திங்கட்கிழமை) மற்றும் 2024-04-09ஆம் திகதிகளில் அங்கத்தவர்களின் வேலைக்காக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

**பிரதான தலைவர்,**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு,**
**சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**294, காலி வீதி, கொழும்பு-03.**

தொலைபேசி இல. 011-2370067 / 011-2575737 / 011-2370717

# பாதுகாப்பு அமைச்சு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### (1) விஞ்ஞானி (பொறியியலாளர்/ புவிச்சரிதவியலாளர்/ அளவை அளவையியலாளர்/ நகர திட்டமிடுபவர்/ ஏனைய வகுதிகள். ஏஆர்-1, தரம் ii- (15 பதவி வெற்றிடங்கள்)

**வெளிவாரி:**

**தகைமைகள்:**
பொறியியல்/ விஞ்ஞானம்/தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் பெற்ற பட்டப்படிப்பொன்று அல்லது உரித்தான துறையில் பொருத்தமான பாட இணைப்புக்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற நான்கு வருட பட்டப்படிப்பொன்று.

**அல்லது**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானத்தில் பெற்ற அல்லது உரித்தான துறையில் பொருத்தமான பாட இணைப்புக்களுடன் பெற்ற மூன்று வருட பட்டப்படிப்பு

**அத்துடன்**
பொறியியலில்/ விஞ்ஞானத்தில்/தொழில்நுட்பவியலில் அல்லது உரித்தான துறையொன்றில் பட்டப்பின் பட்டம்.

உரித்தான துறை நிறுவனத்திலிருந்து பெற்ற கூட்டிணைந்த அங்கத்தினர் பதவிக்கான ஆய்வு ஆராய்ச்சி அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

### (2) தகவல் அலுவலர்: ஜேஎம் 1-1, தரம் ii (01 பதவி வெற்றிடம்)

**வெளிவாரி:**

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பதவிக்கு உரித்தான பாடப்பரப்புக்களுடன் விஞ்ஞானம்/தொழில்நுட்பவியலில் பெற்ற இளமாணிப் பட்டம்.

**அல்லது**
6 ஆம் மட்டத்திற்கு குறையான தகவல் தொழில்நுட்பவியலில் டிப்ளோமா அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தகவல் அல்லது நிகரான தகைமை மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிபதாபனமொன்றில் உரித்தான துறையில் ஐந்து (05) வருட அனுபவம்.

**அல்லது**
தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் 5 ஆம் மட்டத்திற்கு குறையாததும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிபதாபனமொன்றில் உரித்தான துறையில் பத்து (10) வருட அனுபவம்.

### (3) நிருவாக அலுவலர் - ஜேஎம் 1-1, தரம் ii (01 பதவி வெற்றிடம்)

**வெளிவாரி:**

**தகைமைகள்:**
ப.மா.ஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட பொது நிருவாகம்/ வர்த்தக நிருவாகம்/முகாமைத்துவம்/மனித வள முகாமைத்துவம் ஆகியவற்றில் பெற்ற பட்டப்படிப்பு அல்லது பதவிக்குரித்தான பாடப்பரப்புக்களுடனான பட்டப் படிப்பொன்று.

கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபையில்/நிறுவனமொன்றில் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

### (4) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சிவில். எம்ஏ 2-2, தரம் iii (04 பதவி வெற்றிடங்கள்)

**வெளிவாரி:**

**தகைமைகள்:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்டதும் 05 (ஐந்தாம்) மட்டத்திற்கு குறையாத தேசிய தொழிற்பயிற்சித் தகைமையில் பெறப்பட்ட தேர்ச்சித் சான்றிதழொன்று அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் அல்லது நிகரான தகைமை.

உரித்தான துறையில் ஆகக் குநைந்தது 3 வருட அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

### (5) சாரதி, பிஎல்-3, தரம் iii (02 பதவி வெற்றிடங்கள்)

**வெளிவாரி:**

**தகைமைகள்:**
ஆகக் கூடியது இரு அமர்வுகளில் ஆகக் குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

**அத்துடன்**
மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிமம் வாகனம் செலுத்துவதில் சாரதி உரிமத்தைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவம்.

## பொதுவான நிபந்தனைகள்:

**சம்பள அளவுத்திட்டம்:**

| | |
|---|---|
| ஏஆர்-1, தரம் ii | 53,150-1375x10-1910x15-95,550 ரூபா. |
| ஜேஎம் 1-1, தரம் ii | 42,600-10x755-18x1135-70,580 ரூபா |
| எம்ஏ 2-2, தரம் iii | 30,310-300x10-350x7-600x4-710x20-52,360 ரூபா. |
| பிஎல்-3, தரம் iii | 26,290-270x10-300x10-330x10-350x12-39,490 ரூபா |

**சம்பள படிமுறை – (ஆரம்ப படிமுறையாகும்)**

**வயதெல்லை:**

| | |
|---|---|
| ஏஆர்-1 மற்றும் ஜேஎம் 1-1 | - வயதானது 22 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். |
| எம்ஏ 2-2/ பிஎல்-3 | - வயதானது 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். |

உள்வாரி அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

உள்வாரி தகைகைகளுக்கமைவாக உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏனைய நன்மைகள்:** அரசாங்கத்தினாலும் திறைசேரியினாலும் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் ஏனைய நன்மைகள்-படிகள் வழங்கப்படும்.

- வாழ்க்கை செலவுப் படி
- நிறுவனத்தினால் ஊசேநி இற்கு 12% அத்துடன் ஊநநி இற்கு 3% பங்களிப்பிற்கு உரித்து.
- மருத்துவ விடுமுறை மற்றும் வருடாந்த மிகையூதியம் ஆகியவற்றின் மீள்பணமாக்கல்.
- மாதாந்த செயற்பாட்டு ஊக்குவிப்புப் பணம்.
- தொலைபேசி படி, மருத்துவ மற்றும் வாழ்க்கை காப்புறுதி

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பொருத்தமான நிறுவன தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும். சுயதரவு அடங்கலான உரித்தான சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கலான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2024 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியை வந்தடைதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-5.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

LSC

## பெல்வத்த பிரிவு

## வெளிவாரி பதவி வெற்றிடங்கள்

கரும்பு விவசாயம் தொடர்பாக உற்பத்தி செய்யப்படும் பழுப்பு நிற சீனி உட்பட பல உப பொருட்களை உற்பத்தி செய்யும் இலங்கையின் மிகப்பெரிய விவசாய நிறுவனமாக கருதப்படும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு சொந்தமான மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள பெல்வத்தை பிரிவில் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பெல்வத்த பிரிவில் காணப்படும் வெற்றிடங்கள்

### 01. பொதுமுகாமையாளர் – 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- பொருளாதாரம், கணக்கியல், முகாமைத்துவம், வர்த்தகம், கணிதம், விவசாயம் அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்றிருத்தல்

அத்துடன்

- அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தினால் நிறுவப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்தில்" குறைந்தபட்சம் 20 வருட பணி அனுபவம்

வயது - 35 வயதிற்கு குறையாத 55 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

### 02. வேதியளாலர் (M5) - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வேதியியலில் இளங்கலை பட்டம் பெற்றவர்.

மற்றும்

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தில் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல்

வயது - 28 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

### 03. நிர்வாகப் பயிற்சியாளர் - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வேதியியல், மற்றும் தாவரவியல் அல்லது நுண் அறிவியலில் இளமானி அறிவியல் பட்டம்.

வயது - 28 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

### 04. ஒட்டுனர் (P4) - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- கணிதப் பாடத்திற்கான விசேட தேர்ச்சியுடன் 06 கட்டாயப் பாடங்களுடன் (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் தேர்ச்சி

மற்றும்

மையவிலக்கு குழாய்கள் துறையில் இரசாயன ஆலையில் 03 வருட அனுபவம் மற்றும் வெல்டிங் அனுபவம்.

வயது - 28 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

### 05. பயிற்சி முகாமையாளர் - தொழிற்சாலைகள் / உற்பத்திப் பிரிவு - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் (வேதியியல் பாடத்துடன்) அறிவியலில் இளமானி பட்டம் அல்லது வேதியியல் தொடரடபான அறிவியலில் இளமானி பட்டம் பெற்றிருத்தல்.

வயது - 28 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

### 06. இயந்திர வல்லுனர் (P4/P2) - தொழிற்சாலை / பொறியியல் துறை - 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

குறைந்தபட்சம் 08 ஆம் தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மற்றும்

சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது - 28 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

மேற்கண்ட தகுதிகள் மற்றும் அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்கள் இந்த விளம்பரம் வெளியான நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப விண்ணப்பங்களை வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,**
**இலங்கை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## (இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுப்படுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு)

**"இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு"** ஒன்றை நியமித்தல் தொடர்பிலான பிரேரணை பாராளுமன்றத்தினால் 2022 திசம்பர் மாதம் 13 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டதுடன் அக் குழுவின் தவிசாளராக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ அவர்களும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கௌரவ சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே, மேற்படி குழுவிற்கு தமது கருத்துகளை முன்வைப்பதற்கு ஆர்வமுள்ள பொதுமக்கள், ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்

(i) **சட்டக் கல்வி நிர்வாகத்தின் மறுசீரமைப்பு**

(ii) **பாடத்திட்ட மேம்பாடு**

(iii) **போதனை முறை**

(iv) **உட்கட்டமைப்பு மற்றும் வள முகாமைத்துவம்**

(v) **உள்ளக நிறுவன இணைப்புத் திறன் (உள்ளூர் மற்றும் சர்வதேசம்)**

மேற்படி விடயங்கள் தொடர்பான தமது முன்மொழிவுகளை 2024 ஏப்ரல் மார்ச் 20ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு **legis_com@parliament.lk** எனும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கலாம்.

**செயலாளர்**
**பாராளுமன்ற விசேட குழு இலங்கைப் பாராளுமன்றம்**
**ஶ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

தமது கருத்துகளை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் நபர்களிடமிருந்து அவ் விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு குழு அவசியமென தீர்மானிக்கும் பட்சத்தில் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைக்கலாம்.

**ஹங்ச அபேரத்ன**
**குழுவின் செயலாளர்**
**பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஶ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**
2024 மார்ச் 25 ஆம் திகதி

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## தென் மாகாண சபை - பிரதான அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபையின் பிரதான அமைச்சு பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலை விடயங்களுக்காக திறமை வாய்ந்த மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலைகள் | ஒதுக்கீட்டு வளம் | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா (வெட் இன்றி) | தேவையான பதிவு | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| காலி மாவட்டம் | | | | | | |
| 1. | பலபிட்டிய ஆதார வைத்தியசாலையில் முன்புறம் எல்லைச் சுவரை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | மாகாண நிலையான மானியம் (PSDG) | 6,052,284.25 | C7-C6 | 60,000.00 | 3,500.00 |
| 2. | பலபிட்டிய ஆதார வைத்தியசாலையில் பாதுகாப்புச் சுவரை நிர்மாணித்தல் (மிகுதி வேலை மற்றும் நீடித்தல்) | | 4,655,195.40 | C7-C6 | 46,500.00 | 2,500.00 |
| 3 | காலியிலிருந்து அதிவேக வீதியில் பயணிக்கும் பஸ் வண்டிகள் நிறுத்தி வைக்கும் இடத்திற்கு தற்காலிக நிழலிடமொன்றை நிர்மாணித்தல் | | 4,739,061.41 | C7-C6 | 47,000.00 | 2,500.00 |
| மாத்தறை மாவட்டம் | | | | | | |
| 4 | கம்புறுபிட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் கட்டிடத்தின் தரை தளத்தை முழுமையாக்குதல். | | 7,715,926.80 | C7-C6 | 77,000.00 | 3,500.00 |
| 5 | மாத்தறை ரம்யா மொஹொட்டி மார்பு சிகிச்சையகத்தின் மிகுதி வேலைகள் | | 14,869,237.42 | C6-C5 | 148,500.00 | 5,000.00 |
| ஹம்பாந்தோட்டை மாவட்டம் | | | | | | |
| 6 | வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலையில் கழிவுநீர் வடிகான் முறைமையின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | | 2,525,527.10 | C8-C7 | 25,000.00 | 1,500.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் ஊடாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறும் சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையில் மேற்கூறப்பட்ட வகுதியின் கீழ் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

03. 03/2020ஆம் இலக்க 2020-10-09ஆம் திகதிய மற்றும் 03/2020(i)ஆம் இலக்க 2024-01-11ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைந்த திட்டங்களுக்காக 04/2016(iii)ஆம் இலக்க மற்றும் 2021-02-18ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகவும் என்பதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA Grade) முன்னுரிமை மற்றும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விலைக்கோரல் மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

04. விலைக்கோரல் விண்ணப்பங்களை 2024-03-25ஆம் திகதி முதல் 2024-04-09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண பிரதான அமைச்சின் திட்டமிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக விலைமனுக்களை மின்னஞ்சலில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் இந்த இலக்கங்களுக்கு வேலை நாட்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். 091-4946620, 091-4946844.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-04-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், தென் மாகாண பிரதான அமைச்சு, 5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து பிரதான அமைச்சின் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. விலைமனுக்கள் 2024-04-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண பிரதான அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் பிணை முறியானது இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் தென் மாகாண பிரதான அமைச்சின் செயலாளரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட 2024-04-10ஆம் திகதி முதல் 2024-07-23ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று அல்லது அமைச்சின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பணப் பற்றுச்சீட்டை விலைக்கோரல் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

08. விலைமனுக்கள் 77 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

09. வேலைகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கும் விலைகளை மூடும் வகையில் செலோடேப் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். அதன் மூலப் பிரதியில் ''மூலப் பிரதி'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நகல் பிரதியில் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. முழுமையற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் விலைக்கோரல் பிணைத் தொகை அரசுரிமையாக்கப்படும். குறித்த விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த பெறுகை தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண பிரதான அமைச்சு,**
**5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**

2024-03-22

## நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகை - 2024/2025

### ஒப்பந்த அடையாள இல. PRI/SUP/RATION/2024

1. நாடெங்கிலுமுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களின் வகைகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக தகுதியுடைய இலங்கை வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களிடமிருந்து சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகைக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சார்பில் அமைச்சரவை நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்குழு (SCAPC) தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் காலம் 2024 ஜூலை 16ஆம் திகதி தொடக்கம் 2025 ஜூலை 15ஆம் திகதி வரை.

அட்டவணை - நிலையங்களின் குழுமம் மற்றும் தொடர்புடைய வகுதிகள்

| இல. | நிறுவனங்கள் | முகவரி | வகுதிகள் |
|---|---|---|---|
| 01. | அம்பேபுஸ்ஸ | பபோத மெத் செவன, சிறைச்சாலை முகாம், அம்பேபுஸ்ஸ | 1. பாண்<br>2. தேங்காய்<br>3. கருவாடு<br>4. உலர் உணவுகள்<br>5. முட்டை<br>6. மீன்<br>7. பழங்கள்<br>8. இறைச்சி<br>9. இலை மரக்கறி<br>10. அரிசி<br>11. மரக்கறி |
| 02. | அங்குனுகொலபெலஸ்ஸ | இலங்கை சிறைச்சாலை, அங்குனுகொலபெலஸ்ஸ | |
| 03. | அனுராதபுரம் | இலங்கை சிறைச்சாலை, அனுராதபுரம் | |
| 04. | பதுளை | இலங்கை சிறைச்சாலை, பதுளை | |
| 05. | மட்டக்களப்பு | இலங்கை சிறைச்சாலை, மட்டக்களப்பு | |
| 06. | பூஸா | இலங்கை சிறைச்சாலை, பூஸா | |
| 07. | கொழும்பு விளக்கமறியல் | கொழும்பு விளக்கமறியல் சிறை, கொழும்பு 09 | |
| 08. | தலுபொத்த | இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த நிலையம், தலுபொத்த, பள்ளன்சேன, நீர்கொழும்பு | |
| 09. | தும்பர | இலங்கை சிறைச்சாலை, தும்பர, பல்லேகலை, குண்டசாலை | |
| 10 | காலி | இலங்கை சிறைச்சாலை, காலி | |
| 11. | ஹங்கிலிபொல | சிறைச்சாலை பணி முகாம், ஹங்கிலிபொல | |
| 12. | யாழ்ப்பாணம் | இலங்கை சிறைச்சாலை, யாழ்ப்பாணம் | |
| 13. | கந்துருகஹசார | சிறைச்சாலை பணி முகாம், கந்துருகஹசார, துன்கம | |
| 14. | களுத்துறை | இலங்கை சிறைச்சாலை, களுத்துறை வடக்கு, களுத்துறை | |
| 15. | கேகாலை | இலங்கை சிறைச்சாலை, கேகாலை | |
| 16. | குருவிட்ட | இலங்கை சிறைச்சாலை, குருவிட்ட | |
| 17. | மஹர | இலங்கை சிறைச்சாலை, மஹர, ராகம | |
| 18. | மாத்தறை | இலங்கை சிறைச்சாலை, மாத்தறை | |
| 19. | மீத்திரிகல | சிறைச்சாலை பணி முகாம், மீத்திரிகல | |
| 20. | மொனராகலை | இலங்கை சிறைச்சாலை, மொனராகலை | |
| 21. | நீர்கொழும்பு | இலங்கை சிறைச்சாலை, நீர்கொழும்பு | |
| 22. | புதிய மெகசின் | புதிய மெகசின் சிறைச்சாலை, கொழும்பு 09 | |
| 23. | பல்லேகலை | திறந்த சிறைச்சாலை பணி முகாம், பல்லேகலை | |
| 24. | பொலன்னறுவை | இலங்கை சிறைச்சாலை, பொலன்னறுவை | |
| 25. | தெல்தென | இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த மத்திய நிலையம், தெல்தென | |
| 26. | திருகோணமலை | இலங்கை சிறைச்சாலை, திருகோணமலை | |
| 27. | வவுனியா | இலங்கை சிறைச்சாலை, வவுனியா | |
| 28. | வாரியபொல | இலங்கை சிறைச்சாலை, வாரியபொல | |
| 29. | வட்டரெக்க | இளம் குற்றவாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலை மற்றும் சிறைச்சாலை பணி முகாம், வட்டரெக்க, பாதுக்க | |
| 30. | வீரவில | சிறைச்சாலை பணி முகாம், கோனகமுவ, உடுவில | |
| 31. | வெலிக்கடை | இலங்கை சிறைச்சாலை, வெலிக்கட, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 | |

1.1 உணவுப் பொருட்களின் ஒவ்வொரு வகுதிகள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் என்பன விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.

1.2 ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனம் மற்றும் உணவுப் பொருட்கள் வகுதிகளின் கீழ் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்.

1.2.1 பொதி அடிப்படையில் விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு நிலையத்திற்கான ஒரு வகை தனி பொதியாகக் கருதப்படுகின்றது. இதன் பிரகாரம் மொத்தப் பெறுகை 341 தனித்தனியான பொதிகளைக் கொண்டுள்ளது. (31 நிலையங்கள் x 11 வகுதிகள்)

1.2.2 கொள்வனவாளரால் மதிப்பிடப்படும் விலைமனுதாரரின் திறன்களைப் பொருத்து, எந்தவொரு விலைமனுதாரரும் ஒற்றை பெறுகை பொதி அல்லது அதற்கு மேற்பட்டவைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுதாரர்கள் ஒரு குறிப்பிட்ட பொதியின் வகுதியிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

2. இந்த ஒப்பந்தத்தின் ஓர் அங்கமாக தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் இயைபுடைய நிறுவனத்திற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை பொறுப்பேற்க வேண்டும். குறித்த விநியோக நிலையங்கள் தொடர்பான விபரங்கள் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

3. 2006 - பெறுகை வழிகாட்டியின் 3.2 உட்பிரிவிற்கு அமைய தேசிய போட்டிரீதியான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும். வெளிநாட்டு விலைமனுதாரர்களுக்கு விலைகோருவதற்கு அனுமதி இல்லை.

4. விலைகளைக் கோருவதற்கு தகுதியைப் பெறுவதற்கு, பின்வரும் குறைந்தபட்ச மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) கடந்த ஐந்து வருடங்களில் இரண்டு வருடங்களுக்கான உணவு வழங்கல்களின் நிகரான முன்னைய அனுபவம்.

(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கடந்த ஐந்து வருடங்களுக்குள் ஏதேனும் இரண்டு நிதியாண்டுகளில் உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்சம் வருடாந்த சராசரி புரள்வு ஒரு மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

(இ) 2022/2023 வருடங்களில் உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை ஊடாக குறைந்தபட்ச திரவச் சொத்து ஒரு மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். (கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள பணம், குறுகிய கால முதலீடுகள் மற்றும் கிடைக்கவேண்டிய கணக்குகள்)

5. விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.

6. விலைமனுவுடன் தேவைப்படும் சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை மதிப்பிடுவதில் பின்பற்றப்படும் விரிவான வழிமுறை விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளன.

7. சகல விலைமனுதாரர்களும் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முன் www.prisons.gov.lk எனும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வி அறிவித்தலை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

8 விலைமனு ஆவணங்கள் வழங்கல், விலைமனுக்கள் ஏற்பது மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் திகதிகள் மற்றும் நேரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| விலைமனு ஆவணங்களை வழங்குதல் | - 2024-03-25 மு.ப. 9.00 மணி முதல் 2024-04-25ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை |
| விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | - 2024-04-09 |
| தெளிவுபடுத்தல் பெறுவதற்கான இறுதி நாள் | - 2024-04-09 |
| விலைமனு முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | - 2024-04-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

விலைமனுக்கள் திறப்பதற்கான திகதி, நேரம் மற்றும் இடம் - கொழும்பு-10, இல. 10, ஶ்ரீ சங்கராஜ மாவத்தை, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு, 2ஆம் மாடி, பிரதான கேட்போர் கூடத்தில் (2024.04.26ஆம் திகதி மு.ப. 10.00) விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் இடம்பெறும்.

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இல. 150, சிறைச்சாலை தலைமையகம், சிறைச்சாலைகள் திணைக்கள, பிரதான கேட்போர்கூடத்தில் 2024-04-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

10. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 15ஆவது பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் வழங்கல் ஆணையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணம் ஒவ்வொரு நிறுவனம்/ஒவ்வொரு விலைமனுவுக்கும் இயைபாக 2016.06.17ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமையும் (15ஆம் பந்தியில் தரப்பட்ட முகவரியில் வழங்கல் ஆணையாளரிடமிருந்து விலைமனுவிற்கான இயைபுடைய மீளளிக்கப்படாத கட்டணத்தின் அட்டவணையை பெற்றுக்கொள்ளலாம்.)

11. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு, விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள படிவங்களை மாத்திரமே விலைமனுதாரர்கள் பயன்படுத்த வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல்பிரதிகளுடனான விலைமனுக்களை செயலாளர், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு, இல. 10, ஶ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி, திகதி மற்றும் நேரத்தில் சமுகம்தந்துள்ள யாராவது அல்லது பெயரிடப்பட்டுள்ள பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் நேரடியாகத் திறக்கப்படும்.

12. 2024 செப்டெம்பர் 18ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

13. 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் விலைமனுப் பிணை ஒன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்டதாக, நிபந்தனையற்ற கோரும்போது பெறக்கூடியதாக, அசலானதாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட விலைக்கோரல் ஒன்றுக்கான விலைமனுப் பிணைத் தொகையை காட்டும் அட்டவணை விலைமனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

14. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் சிறைச்சாலை தலைமையக (வழங்கல்) ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024 மார்ச் 25ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 03.00 வரையில் 15ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

15. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது.

**கவனம்** : சிறைச்சாலை ஆணையாளர் (வழங்கல்)
**முகவரி** : சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலை தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
**தொலைபேசி** : 011-4677178
**தொலைநகல்** : 011- 4677180, 011-2678531
**மின்னஞ்சல்** : prisons@sltnet.lk

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**(சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகை - 2024/2025)**
**நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு.**

2024-03-25.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**RDA/SP/1500km/WP/33 -** மேரிலேண்ட் பட்டபொல வீதியை மேம்படுத்துதல் - நிர்வாக பொறியியலாளர் பிரிவு நிட்டம்புவ

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனம் - கொத்மலை

### உணவுச் சேவைகளை பேணுதல் – 2024

1. 2024ஆம் வருடத்தில் நிறுவனத்தின் உணவுச் சேவைகளை பேணுவதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கொத்மலை - நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் தலைவர் கோருகின்றார்.

2. 2024-03-25ஆம் திகதி முதல் 2024-04-19ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தேசிய அடையாள அட்டை மற்றும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை நிறுவனத்தின் கணக்கில் பிரிவிற்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொத்மலை - நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனத்திலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனு ஆவணங்கள் 2024-04-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கொத்மலை - நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேச பயிற்சி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் விலைமனுக்கள் மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும்.

4. 2024-04-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

5. தேவையானால் இயைபுடைய விலைமனு ஆவணங்களை நிறுவனத்தின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

### பேலியகொட, ஏக்கல மற்றும் இரத்மலானையில் உள்ள உடைந்த/ பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரோபகரணங்களை விற்பனை செய்தல்

**கேள்வி இல. SDSQ/2024/S-2/P/M/01**

1. இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன பெறுகைக் குழுவின் தலைவரினால் பேலியகொட, ஏக்கல மற்றும் இரத்மலானையில் உள்ள உடைந்த / பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரோபகரணங்களை விற்பனை செய்வதற்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. ஒவ்வொரு விலைமனுதாரர்களும் விலை கோரப்பட்ட உருப்படியின் முழுமையான பெறுமதியின் 10% பெறுமதியான 2024-07-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை (நிபந்தனையற்ற வங்கிப் பிணை முறி / விலைக்கோரல் வைப்பு) சமர்ப்பித்தல் வேண்டும்.

3. மீளளிக்கப்படாத கட்டணமான 1500.00 ரூபாவை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் 7ஆம் மாடியிலுள்ள நிதிப் பிரிவிற்குச் செலுத்தியன் பின் கேள்விப் படிவங்களை 5ஆம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவிலிருந்து 2024-04-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை) மு. ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு கடித உறைகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு 2024-04-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், இல. 130, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் இல.அ.பொ.கூ. பிரதான அலுவலகத்தின் ஆறாம் மாடியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

5. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பொருட்களை பேலியகொட, ஏக்கல, இரத்மலானை இடப்பரப்புகளில் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் நேரத்தை ஒதுக்கிக்கொண்டு பரீட்சித்துப் பார்க்கலாம்.

- ➢ பேலியகொட (102) - 071-1383817 (சில்வா)
- ➢ ஏக்கல (104) - 077-3372378 (முத்துகுமார)
- ➢ ஏக்கல (237) - 071-4459991 (துஷார)
- ➢ ஏக்கல (1707) - 077-7132480 (சம்பத்)
- ➢ இரத்மலானை (888) - 076-0652014 (சிசிர)

6. மேலதிக விபரங்களுக்கு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பிரதான பெறுகை அதிகாரியை 011-2451151 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளவும்.

7. கிடைக்கப்பெற்றுள்ள சகல விலைக்கோரல்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் / நிராகரிக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்,**
**இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை,**
**கொழும்பு -02.**

2024-01-25

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகா சபை

## 1500km வீதி கிராமிய வீதி திட்டத்திற்காக விலைமனுக்களை அழைத்தல் (IFB)

(IFB No. 1,500km / CE(BDL)/2024/01

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் (பதுளை மாவட்டம்) பதுளை மாவட்டத்தில் (மூன்று) ஒப்பந்தங்கள்) வீதி வேலைகளுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.03.25 முதல் 2024.06.14வரை RDA இணையதளம் www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பிரதான பொறியியலாளர் (பதுளை மாவட்டம்)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

### 2011 இன் 40 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இன் 5 ஆம் இலக்கம் கொண்ட பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் 9 (3) ஆம் உறுப்புரைக்கு அமைய விடுக்கப்படும் அறிவித்தல்

இலக்கம் டீ 17/05, ஸ்ரீ விக்ரமபுர, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 750351123 V ஆகிய காரியவசம் போவிதன்திரி பன்துக மொஹான் என்ற நபரின் எழுதி பதிவு செய்யப்பட்டிருக்கும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து ஆதனங்களையும் அகற்றுதல் அல்லது உரிமைமாற்று செய்வதை தடுப்பதற்காக 2024.02.15 ஆம் திகதி குற்ற புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் விசாரணை பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011 இன் 40 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இன் 05ஆம் இலக்கம் கொண்ட பணச் சலவை தடுப்பு சட்டத்தின் 7(1) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் விடுக்கப்பட்டுள்ள செயலற்றதாக்கும் உத்தரவு கேகாலை மேல் நீதிமன்றத்தினால் SLP/6841/2024 கொண்ட வழக்கின் கீழ் 2024.02.21 ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட செயலற்றதாக்கும் உத்தரவு மேலுள்ள சட்டத்தின் 8(2) உறுப்புரைக்கு அமைய 2024.05.21ஆம் திகதி வரை 03 மாதங்கள் அமுல்படுத்தப்படும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட அந்த செயலற்றதாக்கும் உத்தரவு 2024.05.21ஆம் திகதி தொடக்கம் எதிர்காலத்தில் மேலும் நீடிப்பதற்கு முடியுமாவதோடு, ஒரு வேளை குற்றப்பத்திரிகை ஒன்று மேல் நீதிமன்றம் ஒன்றின் முன் தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த செயலற்றதாக்கும் உத்தரவு வழக்கு விசாரணை முடியும் வரை அமுலில் இருக்கும்.

அதன்படி கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமை கொண்டாடலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு நல்லெண்ணம் உடைய மூன்றாவது தரப்புக்கு வசதி அளிக்கும் வகையில் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**அட்டவணை**

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு சமன்தா ஆர். ஜயசேகரவினால் 2022.01.26 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இணைப்பக்க இலக்கம் கே. 118/112 மற்றும் கே 118/148 இன் கீழ் 2022.03.14 ஆம் திகதி கேகாலை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 973 ஆம் இலக்கம் கொண்ட உறுதி

சப்ரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தின் பெலிகல் கோரலே, கீரவெலி பத்துவில் வரகாபொலை பிரதேச சபை மற்றும் வரகாபொலை பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான ஒத்னாபிட்டிய கிராம சேவகர் பிரிவில் ஒத்னாபிட்டிய என்ற ஊர் அமைந்துள்ள பீல்ல அரம்பகாவ ஹேன என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற அளவையாளர் ஜே.ஆர்.எம். பி ஜயகொடியினால் 2016.05.18 ஆம் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட 2015/315 கொண்ட திட்டத்தின் துண்டு இலக்கம் 02 கொண்ட காணித் துண்டுக்கு எல்லைகளான, வடக்குக்கு - இந்தக் காணியின் துண்டு இலக்கம் 01 உம், கிழக்கிற்கு – வீதியும், தெற்கிற்கு - இந்தக் காணியின் துண்டு இலக்கம் 03 மற்றும் ஏ.எச்.எம்.டி.கே. அலஹகோன் மற்றும் மேலும் உள்ளவர்களுக்கு சொந்தமான காணியும், மேற்கிற்கு – டி.ஆர் பொடிமெனிக்கேவுக்கு உரித்தான மீகஹவத்தவும், எல்லையாக ரூட் இரண்டு பர்ச்சர்ஸ் இரண்டு புள்ளி நான்கு (அ.0 ரூ:2 ப:2.4) என காணி மற்றும் அதில் உள்ள வேலைகள் பூர்த்தி செய்யப்படாத வீடு மற்றும் துண்டு இலக்கம் 03 (வீதி) கொண்ட காணித் துண்டுக்கு எல்லைகளான, வடக்கிற்கு - இந்தக் காணியின் துண்டு இலக்கம் 02 உம், கிழக்கிற்கு – வீதியும், தெற்கிற்கு – வீதியும், மேற்கிற்கு – ஏ.எச்.எம்.டி.கே. அலஹகோன் மற்றும் மேலும் உள்ளவர்களுக்கு உரிமையான காணியும், எல்லையாக பர்ச்சர்ஸ் மூன்று புள்ளி ஆறு (அ.0 ரூ:0 ப:3.6) பெரிய பாதை ஒன்றுக்காக ஒதுக்கப்பட்ட நிலப் பகுதியாகும்.

**கே.ஜி. லக்சிறி கீதால்**
**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்**
**பணிப்பாளர், சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவு**

### 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுவிக்கப்படும் அறிவித்தல்.

இல. 573/பி, வெலிகந்த, அஹீங்கல்ல என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 198480602820 கொண்ட வெலிகொடகே நதிகா டி சில்வா என்பவரின் பெயரில் மற்றும் அம் முகவரியிலேயே விசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 861454169V கொண்ட இன்துவாதுர நுவன் சாமர சில்வா என்பவர்களின் பெயரில் பதிவு செய்துள்ள கீழ்க்காணும் சொத்துக்கள் / முதலீடுகளை அகற்றுதல் / அல்லது கைமாற்றுதலை தவிர்க்கும் முகமாக 2024.01.24ம் திகதி குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரியொருவரினால் 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டுள்ள செயற்பாடற்றதாக்கும் கட்டளை பலப்பிட்டிய உயர் நீதிமன்றத்தினால் இல. SPL01/2024 என்ற வழக்கின் கீழ் 2024.01.30ம் திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாரு உறுதிசெய்யப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை மேற்படி சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் 2024.04.30 வரை 03 மாதம் அமுலாகுமாறு மேலும் நீடித்து கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளையொன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்படி சொத்துக்கள் தமது உரிமைக்கோரல் சட்டத்தின் 14ம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தினால் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்கும் முகமாக இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

**வெலிகொடகே நதீகா டி சில்வா என்பரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள்,**

01. SP LO - 5240 எனும் பீசர் வகை லொறி
(செசி இலக்கம் :- NRP 85-7032621, என்ஜின் இல :- 4JJ-266173)
02. SP ZA - 9695 எனும் பெகோ இயந்திரம்
(செசி இலக்கம் :- SLP3CXTS4E0945864, என்ஜின் இலக்கம் :- RG 38086U113632L)
03. IMUL-A-0701 KLT எனும் நீண்டநாள் கடற்றொழில் வள்ளம்.

**இன்துவாதுர நுவன் சாமர சில்வா என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் பணம்.**

01. SP BIU -5785 டியோ வகை மோட்டர் சைக்கில்
(செசி இலக்கம் : ME4JF39NCLA001671, என்ஜின் இலக்கம் : JF39EA1025319)
02. பலப்பிட்டிய ம/உ பி 40879/2021 என்ற வழக்கின் கீழ் சந்தேக நபரின் பொறுப்பில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ள ரூபா 5 இலட்சம் பணம்

### 2011 இன் 40 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இன் 5 ஆம் இலக்கம் கொண்ட பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் 9 (3) ஆம் உறுப்புரைக்கு அமைய விடுக்கப்படும் அறிவித்தல்.

இலக்கம் 91/60, கெமுனுபுற, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 197974308006 கொண்ட கனேகொட தேவகே சரலா என்ற நபரின் பெயரில் எழுதி பதிவு செய்யப்பட்டிருக்கும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து ஆதனங்களையும் அகற்றுதல் அல்லது உரிமைமாற்று செய்வதை தடுப்பதற்காக 2024.02.01 ஆம் திகதி குற்ற புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011 இன் 40 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இன் 05ஆம் இலக்கம் கொண்ட பணச் சலவை தடுப்பு சட்டத்தின் 7(1) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் விடுக்கப்பட்டுள்ள செயலற்றதாக்கும் உத்தரவு கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் HC/02 /2024 பல்வேறு/ விசேடம் கொண்ட வழக்கின் கீழ் 2024.02.07 ஆம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட செயலற்றதாக்கும் உத்தரவு மேலுள்ள சட்டத்தின் 8(2) உறுப்புரைக்கு அமைய 2024.05.07ஆம் திகதி வரை 03 மாதங்கள் அமுல்படுத்தப்படும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட அந்த செயலற்றதாக்கும் உத்தரவு 2024.05.07ஆம் திகதி தொடக்கம் எதிர்காலத்தில் மேலும் நீடிப்பதற்கு முடியுமாவதோடு, ஒரு வேளை குற்றப்பத்திரிகை ஒன்று மேல் நீதிமன்றம் ஒன்றின் முன் தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த செயலற்றதாக்கும் உத்தரவு வழக்கு விசாரணை முடியும் வரை அமுலில் இருக்கும். அதன்படி கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமை கொண்டாடலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு நல்லெண்ணம் உடைய மூன்றாவது தரப்புக்கு வசதி அளிக்கும் வகையில் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**அட்டவணை**

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு தனுஜ கே. ஜயசுந்தரவினால் 2022.07.03 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இணைப்பக்க இலக்கம் ஜே. 258/41 இன் கீழ் 2022.07.14 ஆம் திகதி நீர்கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 679 ஆம் இலக்கம் கொண்ட உறுதி

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரலுவே, ராகம பத்துவே, கம்பஹா காணி பதிவு அலுவலகத்திற்கு சொந்தமான, ஜா-எல பிரதேச அதிகார எல்லையின், ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவின், 205 பி, மஹவத்த கிராம சேவகர் பிரிவில் உதம்மிட்ட என்ற ஊர் அமைந்துள்ள லஹுவெல மற்றும் கட்டுவத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற அளவையாளர் எல்.பீ.ஏ. ஷாந்த பிரிய பெரேராவினால் 2021.02.10 ஆம் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட திட்டம் 5632 கொண்ட கூறு இலக்கம் 01 (1804 கொண்ட திட்டத்தின் கூறு 129) கொண்ட காணித் துண்டுக்கு எல்லைகள் வடக்கிற்கு – 1804 கொண்ட திட்டத்தின் கூறு 128 கொண்ட பகுதியும், 1804 கொண்ட திட்டத்தின் கூறு 131 மற்றும் 130 கொண்ட பகுதியும், தெற்கிற்கு – 20 அடி அகலமான பிரதேச சபை வீதி (1804 கொண்ட திட்டத்தின் R8) உம், மேற்கிற்கு – 1804 கொண்ட திட்டத்தின் கூறு 126 கொண்ட பகுதியும் எல்லையாக பர்ச்சர்ஸ் பன்னிரண்டு புள்ளி ஐந்து பூஜ்யம் (அ:0 ரூ:0 பர்:12.50) ஆகிய ஹெக்டயார் 0.0316 அளவு காணி மற்றும் அதன் மீது அமைந்துள்ள செடிகொடிகள், பழங்கள், கட்டிடங்கள் ஆகிய எல்லா அனைத்துமாகும்.

**கே.ஜி. லக்சிறி கீதால்**
**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்**
**பணிப்பாளர்**
**சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவு**

## இலங்கை தேசிய இணைய பாதுகாப்பு மூலோபாயத்துக்கான பொது மக்களின் கருத்துரைகளினை கோருதல் (2024:2027)

தொழில்நுட்ப அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகின்ற, இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழுவானது (இலங்கை CERT) இலங்கையின் தேசிய இணைய பாதுகாப்பு மூலோபாய வரைபு (2024:2027) தொடர்பில் தங்களின் கருத்துரையினை வழங்குமாறு இலங்கை மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. தேசிய இணைய பாதுகாப்பு மூலோபாயம் என்பது தேசிய தகவல் தொடர்பு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் இலத்திரனியல் சேவைகளின் இணைய பாதுகாப்பு மற்றும் விரிதிறனை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட ஓர் செயல் திட்டமாகும். இது ஒரு குறிப்பிட்ட காலவரையறையினுள் அடையப்பட வேண்டிய தேசிய நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளின் வரம்பை நிறுவும் இணைய பாதுகாப்பிற்கான உயர்மட்ட மேல் கீழான ஓர் அணுகுமுறையாகும்.

இது உலக வங்கி அரச நிறுவனங்கள், தனியார் துறை, கல்வித்துறை, சட்ட மற்றும் கொள்கை வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூகங்களின் உறுப்பினர்கள் உட்பட பலதரப்பட்ட அக்கறைதாரர்களின் ஈடுபாட்டுடன் உருவாக்கப்பட்டதாகும்.

இந்த மூலோபாயமானது (அ) சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்துதல், (ஆ) அறிவை மேம்படுத்துதல் (இ) தயார் நிலை மற்றும் பதிலளிப்பு திறனை வலப்படுத்துதல் மற்றும் (ஈ) ஒத்துழைப்பை அதிகரித்தல் ஆகிய நான்கு மூலோபாய பகுதிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்.

தேசிய இணைய பாதுகாப்பு மூலோபாய வரைபானது இலங்கை CERT இன் உத்தியோகபூர்வ இணையதளமான www.cert.gov.lk இல் உள்ளது. www.cert.gov.lk என்ற மின்னஞ்சலின் ஊடாகவோ அல்லது shammi@cert.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ மூலோபாயம் தொடர்பில் கருத்துக்களை சமர்ப்பிக்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**இலங்கை CERT**
**அறை 4-112, BMICH,**
**பௌத்தாலோக மாவத்தை,**
**கொழும்பு 07.**

பொது மக்கள் தங்கள் கருத்துரைகளினை 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அந்தத் திகதிக்கு பின்னர் பெறப்படும் கருத்துரைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென இலங்கை ஊநுசுவு இனால் உத்தரவாதமளிக்க முடியாதென மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

**கலாநிதி தர்மசிறி குமாரதுங்க,**
**செயலாளர்,**
**தொழில்நுட்ப அமைச்சர்.**

## விலைமனுகோரல் அறிவித்தல்

### மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ஆதார வைத்தியசாலை - ஹோமாகம

### சிற்றுண்டிச்சாலைக்கு விலைமனு கோரல் - 2024/2025

ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-2025 வருடங்களில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் ஒரு வருட காலத்திற்கு பொது சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக அதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் விலைக்கோரல் ஆவணங்களுக்காக 1000.00 ரூபா மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2024-03-25ஆம் திகதி முதல் 2024-04-26ஆம் திகதி வரையில் பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் அலுவலகத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. விலைக்கோரல் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் 2024/2025ஆம் வருடங்களுக்கான சிற்றுண்டிச்சாலை சேவை'' எனக் குறிப்பிட்டு 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை, ஹோமாகம'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
03. விலைமனுக்களை 02 பிரதிகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
05. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்பட மாட்டாது.
06. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**ஹோமாகம.**
**தொலைபேசி: 0112855200, 0112098824, 0112894780, 0112098825**
**தொலைநகல்: 011-2857844**

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

### மட்டக்களப்பு பிரதான நகரத்தில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் மட்டக்களப்பு கிளைக்காக பின்வரும் வசதிகளைக் கொண்ட அலுவலக இடவசதி வாடகைக்கு / குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.

| கிளை | சதுர அடி |
| --- | --- |
| மட்டக்களப்பு | 1000 - 1500 |

**தேவைப்படும் வசதிகள்:**

- தரைத் தளமானது பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 4 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்
- காற்றோற்ற வசதியுடன் கூடிய தனியான மின்பிறப்பாக்கி அறை
- தீக் காப்புறுதி மற்றும் மின்சார பொறியியல் சான்றிதழ்
- விசேட தேவையுடையவர்களுக்கான தனியான நுழைவாயில்
- நீர், தொலைபேசி, திரீ பேஸ் மின்சாரம், மின்பிறப்பாக்கி மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய அடிப்படை தேவைப்பாடுகள்
- அவசர வெளியேற்ற வாயில்
- தரையோடு பதிக்கப்பட்ட தரை
- வீதிக்கு முகப்பாக குறைந்தபட்சம் 25 அடி இருத்தல் வேண்டும்.

சகல விபரங்களையும் உள்ளடக்கிய முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை, சதுர அடிகளின் அளவு, கட்டிட அங்கீகார திட்ட வரைபடம், இணக்கச் சான்றிதழ் (COC), காணி உறுதியின் பிரதிகள் மற்றும் நில அளவை வரைபடம் மற்றும் ஏனைய நிபந்தனைகளையும் உள்ளடக்கி 2024-04-22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதான முகாமையாளர் (HR & Logistic) அவர்களை 011-7722879/011-7722784 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

**ஹொரண முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஹொரண முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை | அளவு | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக | வங்கி பிணை மூலம் |
| PRDA/WP/PRO/ 2024/19 | ஹொரண முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்தல் | 3/4 கருங்கல் (மீட்டர் கி.) | 225 | ரூ. 2000.00 + vat + SSCL | ரூ. 10,500.00 | ரூ. 21,000.00 |
| | | ஆற்று மணல் (மீட்டர். கி.) | 150 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.03.25 - 2024..04.08 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.04.09 மு.ப. 11.00 ஆவதுடன் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**
**தொ. பே. இல. 011-4849825/ 4849845/ 011-2321980**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

**உராய்வு நீக்கி பொருட்களை கொள்வனவு செய்தல்**

**கேள்வி இல. PRDA/WP/PRO/2024/10**

இவ் அதிகார சபையின் கனரக வாகனம் மற்றும் இலகு வாகங்களுக்கு தேவையான உராய்வு நீக்கிப் பொருட்களை வழங்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கி பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/ 2024/10 | அஸ்கிரிய பொரகஹஹேன இயந்திர பொறியியல் அலுவலகத்திற்கு தேவையான உராய்வு நீக்கி எண்ணெய் வகைகள் (18 வகை) மற்றும் அளவுகள் கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளன | ரூ. 1000.00 + vat + SSCC | ரூ. 35,000.00 | ரூ. 70,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.03.25 - 2024.04.08 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.04.09 பி.ப. 2.30 ஆவதுடன் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**

**தொ. பே. இல. 011-2321980**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்துக் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

**On call room/OPD Section மற்றும் மூன்றாம் மாடியின் பின் வேலைகளுக்கு தேவையான பொருட்கள், OPD Section wash busin மற்றும் அதனை பொருத்துவதற்கு தேவையான துணைப்பாகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பென்றி கபட் தயாரித்து பொருத்துதல்**

| கேள்வி இலக்கம் | விபரம் அளவு | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகாரசபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|
| | | | காசாக (ரூபா) | வங்கி/ காப்புறுதி பிணை (ரூபா) |
| PRDA/WP/PRO/ 2024/15 | 1. மின்சார வேலைக்கு தேவையான பொருட்கள்<br>2. wash basin | 1000.00 + 2.5% + 18% வெட் | 15,000.00 | 30,000.00 |
| | 3. பென்ரி கபட் தயாரித்து பொருத்துதல் | | 30,000.00 | 20,000.00 |
| கேள்விகள் விநியோகித்தல் 2024.03.22 முதல் 2024.04.05 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் திறத்தல் 2024.04.08 பி.ப. 2.30 இற்கு | | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படாத வேளைகளில் கேள்விதாரர்களால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.03.04 பி.ப. 2.30 ஆவதுடன் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ. பே. இல. 011-4849825/ 4849845/ 011-2321980**

---

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**புத்தம் புதிய பசும்பாலின் விற்பனை**

2024 மே 1 ஆம் திகதியிலிருந்து 2024 ஜுலை 31 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்/ கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன் றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) | பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 5,000 | பெலிகம பண்ணை, பெலிகமுவ | 100 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 2,500 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 200 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | மல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 400 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 100 | நிக்கவரட்டிய பண்ணை, நிக்கவரட்டிய | 100 |
| கவுல்வெவ பண்ணை, நாரம்மல | 400 | ஓயமடுவ பண்ணை, அலயபட்டுவ | 100 |
| நாரங்கல பண்ணை, கித்தலாவ | 150 | | |

ஆர்வமுள்ள கொள்வனவுக்காரர் தேபவிஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவை அல்லது மேலேயுள்ள எந்தவொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ''தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என முகவரியிடப்பட்டு 2024 ஏப்ரல் 9 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"Bids for Purchasing Fresh Milk"** என தயவு செய்து குறிப்பிடவும். விலைமனுக்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

அனைத்து விபரங்களும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல.: 40, நாராஹேன்பிட்ட வீதி, கொழும்பு-05.**
**011-2501701/2, 0773782127**
**(சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

---

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## மத்திய மாகாணம்

## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

# கேள்வி கோரல்

**கேள்வி இலக்கம் : CPC/PRDA/FA/GCC/TEN - 01**

**தலைப்பு : கம்பளை வர்த்தக நிலையம் (GCC) பதினைந்து வருட காலத்திற்கு "செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் கேள்வி கோரல்"**

1. தலைவர், பெறுகைக் குழு, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் நுவரெலியா - கம்பளை பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள கம்பளை ஐந்து மாடி 25000 சதுர அடி கொண்ட வர்த்தக நிலையம் (GCC) செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் ஆலோசனை ஆவணங்களுக்கு அமைவாக 15 வருட காலத்திற்கு செயற்பாட்டு முகாமைத்துவ மற்றும் பராமரித்தல் முகமாக தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளருக்கு வியாபார கடிதத் தலைப்பில் எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 2024.03.26 முதல் 2024.04.17 வரை சாதாரண அலுவலக தினங்களில் 09.00 முதல் பிற்பகல் 03.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 5000/- கட்டணத்தை பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மக்கள் வங்கி, கணக்கு இல. 158100110000022 இற்கு வைப்புச் செய்து குறித்த பற்றுச் சீட்டை அதிகாரசபைக்கு சமர்ப்பித்தபின் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப் பத்திரங்களில் தரப்பட்டுள்ளவாறு தகைமையுடைய தகைமையான கேள்விதாரர்கள் மாத்திரம் இக் கேள்வியை சமர்ப்பிப்பதற்காக சமுகமளித்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட, பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை இல.109, யட்டிநுவர வீதி, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி போக்குவரத்து, மின்சக்தி, எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிற்கு 2024.04.19 பி.ப. 2.00 இற்கு முன்பு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் இல. 109, யட்டிநுவர வீதி, கண்டி முகவரியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் பொது தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் திறக்கப்படும். அவ்வேளையில் சமுகமளிக்க கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் பிரதிநிதியொருவருக்கு அழைப்புவிடுக்கப்படுகின்றது.
5. எந்தக் கேள்வியையும் எந்தக் காரணமும் கூறாமலேயே ஏற்றுக் கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு தலைவருக்கு உரியது.
6. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற ேள்விதாரர்களுக்கு, மேலதிக தகவல்களை இல.09, எஹலேபொல குமாரிஹாமி மாவத்த, போகம்பர, கண்டி என்ற முகவரியில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையகத்தில் தொ.பே.இல. 081 - 2052279/ 081 - 2052308 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மத்திய மாகாண வீதி அபிவிருத்தி போக்குவரத்து,**
**மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்துக் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

**CSS1/CRS1 இமல்சன் வழங்குதல்**

இவ் அதிகாரசபையின் கீழ்க்காணும் நிறைவேற்று பொறியியல் அலுவலகங்களில் ஆறு மாத தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை | வழங்கல் அளவு | | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. | |
|---|---|---|---|---|---|---|
| | | CSS1 லீட்டர் | CRS1 லீட்டர் | | காசாக | வங்கிப் பிணை |
| PRDA/WP/PRO/2024/17 | 1. கொழும்பு | 10000 | 10000 | 1000 + வெட் வரி | 105,000.00 | 210,000.00 |
| | 2. மொறட்டுவை | 5000 | 5000 | | | |
| | 3. அவிசாவளை | 5000 | 15000 | | | |
| | 4. ஹொரணை | 2000 | 4000 | | | |
| | 5. அகலவத்த | 30000 | 3000 | | | |
| | 6. களுத்துறை | 1000 | 5000 | | | |
| | 7. நிட்டம்புவ | 8000 | 10000 | | | |
| | 8. உடுகம்பல | 10000 | 5000 | | | |
| | 9. நீர்கொழும்பு | 3000 | 3000 | | | |
| | 10. கிரிந்திவெல | 6000 | 3000 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.03.22 - 2024.04.04 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படாத வேளைகளில் கேள்விதாரர்களால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.04.05 பி.ப. 2.30 ஆவதுடன் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (மே.மா.),**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ. பே. இல. 011-4849825/ 011-2321980/ 011-2321980**

# பதவி வெற்றிடங்கள்

IWWRMP

## ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

## நீர்ப்பாசன அமைச்சு

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டமானது உலக வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டமானதும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ளதும் 2025 ஒக்ரோபர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுமாகும்.

2019.03.15 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2019 என்ற இலக்கமுமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் முழுநேர ஒப்பந்த அடிப்படையில் கொழும்பிலுள்ள செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் வேலை செய்வதற்காக உள்ளூர் அதிகாரசபைகள் / அரச கூட்டுத்தாபனங்கள் / பொது சேவை/மாகாண பொது சேவை/நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசிற்கு உரிமையுள்ள கம்பனிகள் அடங்கலாக பொது சேவை /மாகாண பொது சேவை ஆகியவற்றில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

முகாமைத்துவ சேவைகள் திணைக்கள மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை ஷரத்து 2.3.3 (a) மற்றும் ஷரத்து 2.3.3 (b) ஆகியவற்றிற்கு இசைவாக ஆட்சேர்ப்பு நடைபெறும்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 3 ஆம் அட்டவணையின் 3 ஆம் நிரலில் பதவி நிலைகளின் சம்பளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 62 வயதிற்கு குறைவானவர்களாகவிருப்பதுடன் ஆங்கிலத்தில் புலமை அத்துடன் அரசாங்க ஒழுங்கு விதிகளின் பரிச்சயம் மற்றும் கணனி அறிவு ஆகியன அவசியமான முன்தகைமைகளாகும். வெளிநாட்டு நிதி உதவியுடன் இலங்கையிலுள்ள செயற்றிட்டங்களின் வேலை அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

| No. | PS Category | Designation | No. of Positions | Applicable Circular |
|---|---|---|---|---|
| 01 | PS 4A | Engineer | 1 | MSD Circular 01/2019 |
| 02 | PS 4B | Engineer | 3 | |
| 03 | PS 5 | Account Officer | 1 | |
| 04 | PS 5 | Hydro Meteorological Technologist | 1 | |
| 05 | PS 6A | Development Officer | 1 | |
| 06 | | Management Assistant | 2 | 06-2006 Public Service Commission |
| 07 | | Drivers | 3 | |

சுயதரவு அத்துடன் 2 உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றுடனான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2024 ஏப்ரல் 07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடைதல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியையும் குறித்துரைக்கப்படல் வேண்டும். மேலதிகமாக, விண்ணப்பதாரிகள் இந்த விண்ணப்பத்தை ao.iwwrmp@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியையும் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் திணைக்களத்தின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள்**
**மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2 ஆம் மாடி,மஹாவலி நிலையம்,**
**இல.: 96, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07, இலங்கை.**
**தொலைபேசி: 0112691163 இணையம்: www.iwwrmp.lk**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவார்கள். எவ்விதத்திலும் ஆதரவு தேடுவது தகைமையற்றதாக்கும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு.**

25.03.2024

---

# கேள்விகளுக்கான அழைப்பு

## (இலங்கை அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படும் செயற்றிட்டம்)

## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இக்டாட் - ICTAD, சிடா - CIDA பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2024-03-26ஆம் திகதி முதல் 2024-04-15ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இந்தத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திலிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-04-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபாலின் மூலம் அனுப்பியோ கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த வேலைகள் தொடர்பில் மேலும் தகவல்கள் தேவைப்படின் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறிந்துகொள்ளலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இல. | கொள்வனவு செய்யும் பொருள் / சேவை | ICTAD / CIDA பதிவு | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பணமாகச் செலுத்துவ தானால் (ரூபா சதம்) | வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் (ரூபா சதம்) |
| விரி/ப/ 06/02/2024-27 | லபுதுவ விவசாயப் பாடசாலையின் மகளிர் தங்கும் விடுதியின் தரை தளத்தை நிர்மாணித்தல் (05ஆம் கட்டம்) (ரூபா 9,361,492.80) | C-8<br>C-7<br>C-6 | 3,500.00 | 93,600.00 | 187,200.00 |
| விரி/ப/ 06/02/2024-32 | குண்டசாலை விவசாயப் பாடசாலையிலுள்ள உணவு ஆய்வுகூடத்தின் கூரை திருத்தவேலைகள் (ரூபா 4,833,127.40) | C-9<br>C-8<br>C-7 | 1,500.00 | 48,800.00 | 97,600.00 |
| விரி/ப/ 06/02/2024-33 | லபுதுவ விவசாயப் பாடசாலையின் ஆண்கள் தங்கும் விடுதியின் திருத்தவேலைகள் (ரூபா 2,847,528.00) | C-9<br>C-8<br>C-7 | 1,500.00 | 28,450.00 | 56,900.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி,**
**பேராதனை.**

தொலைபேசி இலக்கம்: 081-2389127
தொலைநகல்: 081-2387403

---

# கேள்வி அறிவித்தல்

## அரச அச்சகக் கூட்டுத்தாபனம் (SPC)

## பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்

**கேள்வி கோவை: SPC/AHRD/F1/270/03**

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் கீழ்க்காணும் உருப்படிகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | விற்பனைக்கு தீர்மானித்துள்ள உருப்படி | அளவு அண்ணளவாக | மீளளிக்கப் படும் கேள்விப் பிணைத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01 | அச்சு விடயங்களின் பின் அகற்றப்பட்ட அச்சு தட்டு | 15000 kg | |
| 02 | பல்வேறு அளவிற்கு சொந்தமான பல்வேறு வாகனங்களின் டயர் மற்றும் டியூப்<br>1000 x 20 = 08<br>900 x 20 = 14<br>750 x 16 = 02<br>235 x 65x17 = 02<br>102 x 100 = 07<br>106 x 004 = 03<br>13 x 08 = 01<br>55 x 16 = 01<br>70 x 14 = 02<br>185 x 70x13x86 = 01<br>88 x 86 = 02<br>300 x 17 = 04<br>28 x 1 1/2 = 02<br>2.75 x 17 = 03<br>205 x 55x16 = 01<br>235 x 75x17 = 01<br>175 x 106x104 = 04<br>600 x 14 = 02<br>235 x 75x15 = 01<br>போக் லிப்ட டயர் = 17 | | லொட் இல. 01/02/03/04<br>ரூ. 75000/- |
| 03 | வலைத்துண்டு, கல்வனைஸின் குழாய் துண்டு, உலோக உதிரிப்பாகங்கள் மற்றும் வேறு உலோக பாகங்கள் | 1000 கிலோ | |
| 04 | அகலம் 4 x 30 மற்றும் 6 x 24 வெள்ளை நிரல் தாள் | 4000 கிலோ | |
| 05 | 05 லீட்டர் வாளி | 500 | |
| 06 | 20 லீட்டர் வாளி | 200 | |
| 07 | 04 லீட்டர், 05 லீட்டர் கேன் | 200 | |
| 08 | 10 லீட்டர் கேன் | 120 | ரூ. 5000.00 |
| 09 | 20 லீட்டர் கேன் | 30 | |
| 10 | வெப் பட்டோ/வயர் போடின் | 500 கிலோ | |
| 11 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் பாகங்கள் | 06 | |
| 12 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கம்பிரசர் மோட்டார் மற்றும் மோட்டார் பாகங்கள் | 17 | |
| 13 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட போட்டோப் பிரதி இயந்திரம் | 01 | |

மேற்படி பொருட்களுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத ரூ. 3500.00 வைப்பை நிதி காசாளருக்கு செலுத்தி பெற்றுக் கொள்ளல் மற்றும் பொருட்களைப் பரீட்சித்தலுடன் சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் நிர்வாக மற்றும் மணித வள முகாமையாளர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க என்ற முகவரியில் 2024.03.25 மு.ப. 9.00 முதல் 2024.04.05 பி.ப. 3.00 வரை சாதாரண வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி) மேற்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.04.08 மு.ப. 11.00 இற்கு முன்பு மனித வள முகாமையாளர் அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க என்ற முகவரியில் நிர்வாகப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடிவதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் SPC/HRD/F1/2024/270/03 கேள்வி கோவை இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். அன்றே மு.ப. 11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் தாமதமாக வழங்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விதாரருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக தகவல்களை தொ.பே. இல. 011-2859546 மூலம் நிர்வாகம் மற்றும் மனித வள முகாமைத்துவம் இடம் விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**அரச அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பானலுவ, பாதுக்க.**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

LSC

## வெளிவாரி பதவி வெற்றிடங்கள்

கரும்பு விவசாயம் தொடர்பாக உற்பத்தி செய்யப்படும் பழுப்பு நிற சீனி உட்பட பல உப பொருட்களை உற்பத்தி செய்யும் இலங்கையின் மிகப்பெரிய விவசாய நிறுவனமாக கருதப்படும் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நிறைவேற்றுச் செயலாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதிவாய்ந்த மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### 01. நிறைவேற்றுச் செயலாளர் – 01 வெற்றிடம்

**தகுதி மற்றும் அனுபவம்**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- துறையில் தொடர்புடைய டிப்ளமோ அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றிருக்க வேண்டும்.
- நிரைவேற்றுச் செயலாளராக 05 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்
- சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பணி ஆற்றும் திறன்
- MS Office கோப்பில் பணியாற்றும் திறன் மற்றும் அடிப்படை கணினி அறிவு

வயது - 30 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்

**முக்கிய பொறுப்புகள்**

- பிரதான நிரைவேற்று அதிகாரியின் கூட்டங்களில் கலந்துகொண்டு குறிப்பெடுத்தல்
- பணிப்பாளர் குழு / குழுக்கள் / துணைக் குழுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் குறிப்பெடுத்தல்
- பிரதான நிரைவேற்று அதிகாரியின் தினசரி பணிக்காரன அட்டவணை, கூட்டங்கள், நிகழ்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிப்பது உள்ளிட்ட நிர்வாகச் சேவைகளை வழங்குதல்.

மேற்கண்ட தகுதிகள் மற்றும் அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்கள் இந்த விளம்பரம் வெளியான நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப விண்ணப்பங்களை வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,**
**இலங்கை.**

SELACINE

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER
adz It's what you want
Classified
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON
Lake House Branch
Acc. No. 000000377

# பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்ட்: வெற்றியை நெருங்கியது இலங்கை அணி



தனஞ்சய டி சில்வா மற்றும் கமிந்து மெண்டிஸ் இரண்டாவது இன்னிஸிலும் பெற்ற சாதனை இணைப்பாட்டத்தின் மூலம் முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷுக்கு 511 ஓட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது.

சில்ஹட்டில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று (23) கடைசி நேரத்தில் வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி ஆட்டநேர முடிவின்போது 5 விக்கெட் இழப்புக்கு 47 ஓட்டங்களை பெற்று தடுமாற்றம் கண்டுள்ளது.

119 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்த நிலையிலேயே இலங்கை நேற்று தனது இரண்டாவது இன்னிஸை தொடர்ந்தது. எனினும் மேலும் 7 ஓட்டங்களை பெறுவதற்குள் 6 ஆவது விக்கெட்டையும் பறிகொடுத்தது.

இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த தனஞ்சய மற்றும் கமிந்து முதல் இன்னிங்ஸ் போன்றே எதிரணிக்கு தலையிடி கொடுத்தனர். இருவரும் இணைந்து 176 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டதோடு முதல் இன்னிங்ஸை போன்றே இருவரும் சதம் பெற்றனர்.

இதில் தனஞ்சய 179 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 108 ஓட்டங்களை பெற்றதோடு கமிந்து 237 பந்துகளில் 16 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் 164 ஓட்டங்களை குவித்தார்.

முன்னதாக இருவரும் முதல் இன்னிங்ஸிலும் 6 ஆவது விக்கெட்டுக்கு 202 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 150க்கும் மேல் இணைப்பாட்டத்தை பெறும் மூன்றாவது ஜோடியாக இருவரும் சாதனை படைத்தனர்.

இதற்கு முன்னர் 1938 ஆம் ஆண்டு இங்கிலாந்து ஜோடி ஒன்று இந்த சாதனையை படைத்திருப்பதோடு கடைசியாக 2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் டேவிட் வோனர் மற்றும் ஜோன் பர்ன்ஸ் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 150க்கும் மேல் இணைப்பாட்டத்தை பெற்றுள்ளனர்.

அதேபோன்று 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை வீரர் ஒருவர் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றவர்களாக இந்த இருவரும் பதிவாகினர். கடைசியாக குமார் சங்கக்காரவே இதே பங்களாதேஷுக்கு எதிராக இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றிருந்தனர்.

இதன்படி இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 110.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 418 ஓட்டங்களை பெற்றது.

ஏற்கனவே இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 280 ஓட்டங்களை பெற்று பங்களாதேஷ் அணியை முதல் இன்னிங்ஸில் 188 ஓட்டங்களுக்கு சுருட்டிய நிலையில் 92 ஓட்டங்களால் முன்னிலை பெற்றே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்திருந்தது.

தனஞ்சய, கமிந்து தவிர ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திமுத் கருணாரத்ன 101 பந்துகளில் 51 ஓட்டங்களை பெற்றிருந்தார். பங்களாதேஷ் சார்பில் மஹதி ஹசன் மிராஸ் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் சவாலான வெற்றி இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி விஷ்வ பெர்னாண்டோ வீசிய முதல் ஓவரிலேயே மஹ்மூதுல்லா ஹசன் ஜோவின் விக்கெட்டை பறிகொடுத்தது. தொடர்ந்து அணித் தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷான்டோ 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து சாக்கிர் ஹசன் (19), ஷஹதாத் ஹொஸைன் (0) மற்றும் லிட்டோன் தாஸ் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் பங்களாதேஷ் அணி மூன்றாம் நாள் அட்டநேர முடிவின்போது 13 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களை பெற்றுள்ளது. விஷ்வ பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

இதன்படி பங்களாதேஷ் அணி வெற்றிக்கு இன்னும் 464 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் இலங்கை அணி இன்னும் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினால் போதுமானது.

இன்று (25) போட்டியின் நான்காவது நாளாகும்.






கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நேற்று முன்தினம் (23) நிறைவடைந்த புனித ஜோசப் கல்லூரிக்கும் புனித பேதுருவானவர் கல்லூரிக்கும் இடையிலான அருட்தந்தை மொறிஸ் லே கொக் ஞாபகார்த்த கிண்ண 90ஆவது புனிதர்களின் கிரிக்கெட் சமர் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இதில் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும விநியோக சங்கிலி முகாமைத்துவம் மற்றும் கூட்டுத்தாபன திட்டமிடல் பிரிவின் துணைத் தலைவர் முனேஷ் டேவிட், புனித ஜோசப் கல்லூரியின் அபிஷேக் ஜயவீரவிடம் சிறந்த சகலதுறை ஆட்டக்காரருக்கான கிண்ணத்தை கையளிப்பதை காணலாம்.




## அக்கரைப்பற்று கரம் அணி மாவட்ட சம்பியனாக தெரிவு

**ஒலுவில் கிழக்கு, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**



அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற கரம் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கரம் அணியினர் வெற்றி பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ரீ.எம். விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (23) ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணியை, அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச கால்பந்தில் அதிவேக கோல் பெற்று உலக சாதனை



ஸ்லோவாக்கிய அணிக்கு எதிரான போட்டியின் ஆறாவது விநாடியில் கோல் புகுத்திய ஆஸ்திரிய வீரர் கிறிஸ்டோப் போம்காட்னர் சர்வதேச கால்பந்து போட்டியில் அதிவேக கோல் பெற்றவராக உலக சாதனை படைத்துள்ளார்.

ஸ்லோவாக்கிய தலைநகர் பரடிஸ்லாவாவில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற நட்புறவுப் போட்டியிலேயே இந்த சாதனை படைக்கப்பட்டது. போட்டி ஆரம்பித்த விரைவிலேயே எதிரணியில் மூன்று தற்காப்பு வீரர்களை முறியடித்த போம்காட்னர் தாழ்வாக உதைத்து கோல் புகுத்தினார். இந்தப் போட்டியில் ஆஸ்திரிய அணி 20 என வெற்றியீட்டியது. முன்னதாக 2013இல் ஈக்வடோருக்கு எதிராக ஜெர்மனியின் லூகஸ் பொடொஸ்கி 7 ஆவது விநாடியில் பெற்ற கோலே சாதனையாக இருந்தது.

# சர்வதேச செய்திகள்



## காசா எல்லைக்குச் சென்ற ஐ.நா. தலைவர் 'பயங்கர போரை' நிறுத்துமாறு மன்றாட்டம்

### தாக்குதல்கள் தொடரும் நிலையில் பேச்சில் முன்னேற்றமில்லை

ஐக்கிய நாடுகள் சபை தலைவர் அன்டோனியோ குட்டரஸ் காசா வாயிலுக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டு, மேலும் உதவிகள் செல்வதை அனுமதிக்கும் வகையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்ததோடு இஸ்ரேல்–ஹமாஸ் போரின் பயங்கரத்தை உலகம் பார்த்திருந்தது போதும் என்றும் வலியுறுத்தினார்.

காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த நீடிப்பதோடு, காசா நகருக்கு வெளியே உதவி விநியோகம் இடம்பெறும் இடத்தில் இஸ்ரேல் நடத்திய மற்றொரு தாக்குதலில் மேலும் 19 பேர் கொல்லப்பட்டதாக காசா அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உதவிக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலிய டாங்கிகள் தாக்குதல் நடத்தியதாகவும் செல் குண்டுகளை வீசியதாகவும் காசா நிர்வாகம் கூறியது. 'குவைட் சுற்றுவட்டப்பாதையில் உதவி லொறிகளுக்காக காத்திருந்தபோது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவ டாங்கி சூடு நடத்தியதோடு செல் குண்டுகளை வீசியது' என்று காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

இந்த மாத ஆரம்பத்திலும் இதே இடத்தில் உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் காசாவில் உதவி வாகனங்களுடன் தொடர்புட்ட சம்பவங்களில் இஸ்ரேலிய படையினரால் இதுவரை குறைந்தது 560 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 1,523 பேர் காயமடைந்திருப்பதாக ஜெனீவாவை தளமாகக் கொண்ட மனித உரிமை கண்காணிப்புக் குழு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

'இஸ்ரேல் பட்டினியை ஒரு போர் குற்றமாக பயன்படுத்துகிறது' என்றும் அந்த கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது.

காசாவை முழுமையாக முற்றுகையில் வைத்திருக்கும் இஸ்ரேல் அங்கு உதவிகள் செல்வதை கட்டுப்படுத்தி வரும் நிலையில் உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதோடு அந்தப் பகுதி பஞ்சம் ஒன்றை நெருங்கி இருப்பதாக ஐ.நா மற்றும் உதவி அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

'சிறுவர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் என காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் இடைவிடாத பயங்கரத்தில் சிக்கியுள்ளனர்' என்று உதவிகள் செல்வதற்கான பிரதான நுழைவாயிலாக இருக்கும் காசாவுடனான ரபா எல்லைக் கடவையின் எகிப்து பக்கத்தில் இருந்து குட்டரஸ் தெரிவித்தார்.

இந்த ரபா பகுதியில் காசாவின் 2.4 மில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இங்கு தமது துருப்புகளை அனுப்பப்போவதாக இஸ்ரேல் தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

'இது போதுமானது என்ற உலகின் அதிகப் பெரும்பான்மையான மக்களின் குரலையே நான் பிரதிபலிக்கிறேன்' என்று கூறிய குட்டரஸ், 'அங்கு



சமூகங்கள் அழிக்கப்பட்டுள்ளன, வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த குடும்பங்கள் மற்றும் தலைமுறைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன' என்று அவர் கூறினார்.

ஒக்டோபர் 7 தாக்குதல் அல்லது பலஸ்தீனர்கள் மீதான கூட்டுத் தண்டனையை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது என்று கூறிய அவர் காசா முழுவதும் மனிதாபிமான பொருட்கள் செல்வதை முழுமையாக மற்றும் தடங்கலற்ற வகையில் அனுமதிக்க வேண்டும் என்று இஸ்ரேலை வலியுறுத்தினார். 'வாயிலின் ஒரு பக்கத்தில் நிவாரண லொறிகள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் அதேநேரம் மறு பக்கத்தில் பட்டினி நீடிப்பது தார்மீக சீற்றத்தை ஏற்படுத்துகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அல் ஷிபா மருத்துவமனை வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றைய (24) தினத்திலும் தொடர்ந்தன. அல் ஷிபா மருத்துவமனைக்கு அருகில் வசிக்கும் 59 வயது முகமது அங்குள்ள நிலைமையை ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு விபரித்துள்ளார். வீதிகளில் சடலங்கள் சிதறிக் கிடப்பதாகவும் கட்டடங்கள் தீக்கிரையாகி வீதிகள் டாங்கிகளால் முடக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். 'காசா நரக நெருப்பை விடவும் மோசமாக மாறியிருப்பதாக நான் நினைக்கிறேன்' என்றார்.

மறுபுறம் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலிய தரைப்படை மற்றும் விமானப் படையின் கடுமையான தாக்குதல்கள் மற்றும் ரபா மற்றும் டெயிர் அல் பலாவில் இடம்பெற்ற குண்டு வீச்சுகளில் குறைந்தது 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 84 பேர் கொல்லப்பட்டு மேலும் 106 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று கூறியது. இதன்படி கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இடம்பெறும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 32,226 ஆக அதிகரித்துள்ளது.

இஸ்ரேலில் நெதன்யாகு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்றபோதும் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் இன்றி நீடித்து வருகிறது.

பணயக்கைதிகள் சிலரை விடுவித்து போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் தொடர்ந்தும் முயற்சி இடம்பெற்று வருகிறது. எனினும் போர் தரப்புகள் இடையே தொடர்ந்தும் ஆழமான இடைவெளி இருப்பதாக இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பில் அறிந்த ஹமாஸ் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'(ஹமாஸ்) அமைப்பு வெளிக்காட்டும் நெகிழ்வுப் போக்கை எதிரிகள் பலவீனம் என்று புரிந்து கொண்டிருப்பதால் ஹமாஸ் மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் இடையிலான பேச்சுவார்த்தை நிலைகளில் ஆழமான வேறுபாடு ஒன்று உள்ளது' என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## 133 பேர் கொல்லப்பட்ட மொஸ்கோ தாக்குதலின் 'நால்வரும்' சிக்கினர்



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் மக்கள் நிரம்பிய இசை நிகழ்ச்சி மண்டபம் ஒன்றில் தாக்குதல் நடத்திய நான்கு துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் கண்மூடித்தனமாக சூடு நடத்தி இருப்பதோடு அந்த வளாகத்திற்கு தீ வைத்த நிலையில் குறைந்தது 133 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 140 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டதாகவும் நான்கு துப்பாக்கிதாரிகள் உக்ரைனை நோக்கி செல்லும் வழியில் பிடிபட்டதாகவும் ரஷ்ய நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) குழு பொறுப்பேற்றுள்ளது.

தாக்குதல்களில் தொடர்புபட்டவர்கள் என முகமூடி அணிந்த நால்வரின புகைப்படத்தை ஐ.எஸ். டெலிகிராம் பக்கத்தில் கடந்த சனிக்கிழமை (23) வெளியிட்டிருந்தது. பின்னர் தாக்குதலின்போது எடுக்கப்பட்ட காட்சிகளையும் அந்தக் குழு வெளியிட்டது. இதில் துப்பாக்கிதாரி ஒருவர் பலர் மீது சூடு நடத்துவது பதிவாகியுள்ளது. இந்நிலையில் தொலைக்காட்சி உரை ஒன்றில் இந்தப் படுகொலையை கண்டித்த புட்டின், 'காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயல்' என்று வர்ணித்தார். தாக்குதல்தாரிகள் உக்ரைனுக்கு தப்பிச் செல்ல முயன்றதாக பாதுகாப்பு தரப்பினர் முன்னர் குறிப்பிட்டதை அவர் மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டி இருந்தார். எனினும் இந்தத் தாக்குதலில் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டிருப்பதாக கூறும் குற்றச்சாட்டை அபத்தமானது என்று உக்ரைன் நிராகரித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அந்த இசை மண்டபத்தில் தாக்குதல் இடம்பெறும்போது அங்கு 6,200 பேர் வரை இருந்துள்ளனர்.

அப்போது அங்குள்ள மக்கள் அச்சத்தில் சிதறி ஓட ஆரம்பித்துள்ளனர். தாக்குதல்தாரிகள் பெட்ரோல் குண்டுகளை வீசியதை அடுத்து அந்த மண்பத்தில் தீ பரவ ஆரம்பித்ததாக பார்த்தவர்கள் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி புட்டின் நேற்று தேசிய துக்க தினத்தை அறிவித்ததோடு பொது நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

இந்த 'கொடூரமான' தாக்குதலை கண்டித்த வெள்ளை மாளிகை, இஸ்லாமிய அரசு ஒரு பொதுவான பயங்கரவாத எதிரி என்றும் அனைத்து இடங்களிலும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.